தமிழன்

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

"தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்"
'எண்ணித்துணிக கருமம்'.
"எவ்வ துறைவ துலக முலகத்தோ-
டவ்வ துறைவ தறிவு."

C. N. அனந்தராமைய சாஸ்திரி M. A., பண்டிதர் S. முத்துசுவாமிப் பிள்ளை, பத்திராசிரியர்கள்.

தொகுதி V. | 1092 மாசி: திருவனந்தபுரம்: MARCH 1917. | பகுதி 1.

முக்கிய அறிவிப்பு.

இம்மாதம் முதல 'தமிழன்' பத்திரிகைக்கு நாங்கள் சொந்தக்காரர் ஆயிருக்கிறோம். இதற்குமுன் 'தமிழன்' பத்திரிகைக்குக் கொடுக்கவேண்டிய பாக்கிப் பணங்களை யெல்லாம் பத்திராதிபர் பண்டிதர் S. முத்துசுவாமிப் பிள்ளையவர்களுக்கே அனுப்பிக் கொடுக்கவேண்டும். இந்தமாதம் முதல் உள்ள பணங்களும் பத்திரிகையைப் பற்றிய சகல கடிதங்களும் எங்களுக்கே அனுப்பவேண்டும். பத்திரிகையில் பிரசுரிக்கவேண்டிய விஷயங்களும மாற்றுப் பத்திரிகைகளும் அபிப்பிராயத்துக்குள்ள புஸ்தகங்களும் 'ஸ்ரீமான், C. N. A. இராமய்யா சாஸ்திரி அவர்கள் M. A. பத்திராதிபர், திருவனந்தபுரம்' என்ற விலாசத்துக்கு அனுப்பவேண்டும்.

T. Nagasubramania Rao Bros.,
BOOKSELLERS, PUBLISHERS & STATIONERS.
Agents for Law Books etc.
Trivandrum.

பொருள் அடக்கம்.

	விஷயம்.	பக்கம்.
1.	மாதசரிதம்.	2
2.	சந்தாநேயர்களுக்கு அறிவிப்பு.	3
3.	Neuter terminations & their after-history.	4
4.	பூமி: அதன் உருவம்.	5
5.	எலிமென்றரிப் பாடசாலைகளில் கைத்தொழில் பயிற்றுவித்தல்.	7
6.	நாஞ்சிநாட்டு மருமக்கள்வழி மான்மியம்.	9
7.	உத்தரராமசரிதம்.	13
8.	பறங்கிமா.	15
9.	மறவாதன்பு (ஒரு சிறுகதை)	17

சந்தா விவரம்.

இந்தியா இலங்கை	ரூ.	2
வெளிநாடுகளுக்கு	ரூ.	3

குறிப்பு:—சந்தாத்தொகை எப்பொழுதும் முன்னதாகவே செலுத்தப்படவேண்டும்.

T. Nagasubramania Rao Bros,
PUBLISHERS, TRIVANDRUM.

மாதசரிதம்.

(பத்திராதிபர்)

திருவிதாங்கோட்டு அரசர் குடும்பத்தின் சந்தானவல்லியாய் அவதரித்திருக்கும் கார்த்திகை திருநாள் லக்ஷ்மிபாய் தம்பிராட்டி திருமேனிக்கு இம்மாதத்தில் அன்னப்பிராசனம் மிக மங்களமாக நடந்தேறியிருப்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றோம். நமது செல்வச் சிறு அரசி நோயற்ற வாழ்வும் நீடித்த ஆயுளும் பெற்று திருவிதாங்கோட்டு ராஜ பரம்பரையைச் செழிப்பிக்குமாறு ஸ்ரீபத்மநாபன் திருவருள் புரிக!

1857-வது வருஷம் முதல் புதிய ரெகுலேஷன் நடப்பில் வந்தநாள்வரையிலும் சென்னை சர்வகலாசாலை B. A. பரீட்சைக்கு இங்கிலீஷ் பாஷையும் தேவை விஷயமும் (optional subject) போலவே, வேறு ஏதேனுமொரு பாஷையும் கற்கவேண்டுமென்று ஏற்பாடு இருந்தது. புதிய ரெகுலேஷனுக்கிப்பால் B. A பரீட்சைக்கு இங்கிலீஷும் தேவை விஷயமும் மட்டும் போதுமென்றும் 'இன்டர்மீடியற்று' பரீட்சைக்கு வியாசமட்டுமன்றி இலக்கிய விஷயங்கள் வேண்டாவென்றும் ஏற்பாடாய்விட்டது. 'இன்டர் மீடியற்று' வியாசத்துக்கு விஷயமாக அப்போதைக் கப்போது நிச்சயிக்கப்படும் வசனநடைப் புத்தகங்களிலிருந்து கேள்விகள் கேட்கும்படி பிற்பாடு சீர்திருத்தியிருக்கின்றனர். செய்யுள் வசன நூல்களை ஆராய்ந்து ஆசிரியர் கருத்துக்களைச் செவ்வையாய் அறிவதற்கு மேற்கூறிய இரண்டு பரீட்சைகளுக்கும் படிப்பவர்களுக்கு இடம் சுருங்கிவிட்டது. B. A. க்குப் படிப்பவர்கள் சம்ஸ்கிருதமாவது மற்றத் தேசபாஷைகளாவது படிக்கவிரும்பினால் மேனாட்டுச் சாஸ்திர விஷயங்கள் கற்கக்கூடாதென்று ஒரு சாபம் நிகழ்ந்தது போல் ஆய்விட்டது. இந்நிலைமையைவிட இங்கிலீஷ், தேவை விஷயம், தாய்ப்பாஷை ஆகிய மூன்றையும் B. A. க்குக் கற்றுவந்த பழையமாணாக்கர்களின் நிலைமையே மேலானதாயிருந்தது. தாய்ப் பாஷையோடு மொழிபெயர்ப்பையும் பரீட்சை விஷயமாக வைத்திருந்ததை மாற்றி இலக்கியமும் வியாசமும் பரீட்சாவிஷயமாகும்படி சீர்திருத்தம் செய்திருப்பார்களானால் B. A. ஜெயிப்பவர்களுக்கு சுயபாஷாப் பயிற்சி குன்றியிருந்ததென்னும் குற்றம் நீங்கியே இருக்கும். மேலும் வேண்டியபடி நன்மை விளைய வேண்டுமானால் இந்தப் படியே நிபந்தனை செய்ய வேண்டுமென்பது நமது அபிப்பிராயம். ஆங்கிலத்திலும் தேவை விஷயத்திலும் பயிற்சி குறைந்துவிடுமென்று பயமிருந்தால் இன்டர்மீடியற்றில் இப்பொழுது முதல் வகுப்பில் B. பிரிவாக வைத்திருக்கும் விஷயத்தை சிறுபான்மை இலக்கியமும் அதையொட்டின வியாசமுமாக மாற்றி, இப்பொழுது இந்த B பிரிவு இருக்கும்படியான நிலைமையில் ஓர் B பிரிவு B. A. யிலுள்ள ஆங்கிலத்துடன் அமைப்பார்களானால் மிகுந்த நன்மை உண்டாகும் என்பதற்கு சந்தேகமேயில்லை. தாய்ப்பாஷை படிப்பவர்களுக்கு சாஸ்திரமாவது சரித்திரமாவது தெரியாமலும், இவை தெரிந்தவர்களுக்குத் தம்பாஷையில் அமைந்துள்ள கருத்துக்கள் விளங்காமலும் இருக்கும் கஷ்டத்தை எவ்வாற்றானும் நீக்கவேண்டும். 'இன்டர்மீடியற்றுக்கு' தேசபாஷை இலக்கியமும் பரீட்சா விஷயமாக ஏற்படுமானால், 'ஸ்கூல் பைனல்' வகுப்பில் கூட, கணிதம், பிரகிருதி சாஸ்திரம் முதலியன படிப்பவர்களுக்கு சுயபாஷையில் வியாசம் மட்டும் போதும் என்றிருக்கும் இழிவான நிலைமையும் நீங்கிவிடும். 15 வயது ஆகும்போதே வியாசம், உபந்யாசம் என்பது எவ்வளவு கஷ்டம்! அந்தந்த வகுப்புக்கு ஏற்றபடி எந்த மாணாக்கனுக்கும் இலக்கியத்துடன் வியாசம் அமைப்பும் பரீட்சா விஷயமாக இருக்கவேண்டியது அவசியமே. ஆனால் தன்னாட்டுக் கவிமர்மங்களை எட்டிப்பாராதவர்கள் பிரபந்தங்கள் மட்டும் எழுதித் தேறவேண்டும் என்று நிபந்தனை ஏற்படுத்தியிருப்பது வித்தூன்றாது கனி பறிக்க முயலுவதற்கு ஒப்பாகும்.

இந்த சமஸ்தானத்தில் திவான்ஜியாகவிருந்த காலங்களில் கல்விவளர்ச்சிக்காக எப்பாடும்படக் கங்கணம் கட்டியிருந்தவரும், சென்னையில் சென்றபின்னும் அங்குள்ள 'செக்ரிட்டேரியட்' சபையில் கல்விவிஷயமாக உழைத்திருந்தவருமாகிய திவான் பகதூர் P. ராஜகோபாலாசாரியர் M. A., B. L., C. I. E. அவர்களை சென்னைக் கவர்னர் நிருவாக சபையில் ஒரு "மெ[illegible]ராக" நியமித்திருப்பதை அறிந்து மிகச் சந்தோஷமடைகிறோம். இம்மகான் 1886-ஹு பிரிட்டிஷ்

துரைத்தன உத்தியோகத்தில் சேர்ந்தார். முதலில் திருச்சிராப்பள்ளி 'டிப்யூட்டிகலக்ற்ற'ராகவும் பின்னர் கர்னூல் கலெக்ற்றராகவும் அதற்கப்பால் ஐக்கிய நாணயச் சங்கம் ரெஜிஸ்திரார் ஆகவும் உத்தியோகம் நடத்திய பின்னர் கொச்சி திவான் ஆனார். பிறகு திருவிதாங்கூர் திவான் ஆனதும் பலசீர்திருத்தங்களைச் செய்து நாட்டாரின் நன்றியறிதலைப் பெற்றதும் நம்மவர்கள் நன்கறிந்த விஷயமே. தற்போது கிடைத்திருக்கும் நூதன உத்தியோகத்திலும் அவர்கள் பெருமையடைவார்கள் என்பதற்கு சந்தேகமில்லை,

இவ்விடத்துத் துரைத்தனக் கலாசாலையிலும், வெளியூர்களிலுள்ள கல்விச்சாலைகளிலும் சரித்திரவிஷயமாகப் பிரசங்கித்துக் கீர்த்திபெற்றவரும், அபூர்வமானபடி கல்வி இலாகாவிலிருந்து இந்த சமஸ்தானத்து நியமநிர்மாண சபையில் 'மெம்பர்' உத்தியோகம் பெற்றவரும் ஆன ஸ்ரீமாந் K. V. ரெங்கசுவாமி ஐயங்கார் M. A., F. B. H. S., அவர்களுக்கு ராவ்பகதூர்ப்பட்டம் அளிக்கப்பட்டதற்கு நாம் அளவற்ற சந்தோஷமடைகிறோம்.

மாயூரம் முனிசிப்பல் ஐஸ்கூல் தலைமை ஆசிரியரும், ஜனங்களின் நன்மைக்காகவும், நாட்டுக்கும் நாட்டுப்பாஷைகளுக்கும் மேன்மையுண்டாவதற்காகவும், முயன்றுவருபவருமான ஸ்ரீமாந் K சேஷு அய்யர் B. A, L. T. அவர்களுக்கு ராவ்பகதூர்ப் பட்டம் கிடைத்திருப்பதும் மிக மகிழத்தக்கதே.

திருவிதாங்கோட்டு இளங்கோ மணியாகிய சித்திரை திருநாள் திருமேனியின் புத்தி தீட்சண்ணியத்தை விளக்கும் சிலவிஷயங்கள் கொல்லம் "மலையாளி"ப் பத்திரிகையில் வெளிவந்திருக்கின்றன. மேற்றிசை நாடுகளில் அரசர்களையும் அரச குடும்பத்தாரையும் பற்றிய கதைகள் அப்போதைக்கப்போது பத்திரிகைகளில் வெளிவருகின்றன. இந்தியாவில் மட்டும் இவ்வழக்கம் மிக அபூர்வம். ஆகையால் நமது சகஜீவியான "மலையாளி"யின் இந்நன்முயற்சி மிக மெச்சத்தக்கதே. அவ்விஷயத்தை அடுத்த மாதத் தமிழனில் வெளியிட உத்தேசித்திருக்கிறோம்.

சந்தாநேயர்களுக்கு அறிவிப்பு.

சென்ற ஆறுமாதங்களாக நமது பத்திரிகை வெளிவரவில்லை, யுத்தம் நிமித்தம் உண்டான கஷ்டங்களால் தனிமையாகப் பத்திரிகை நடத்துவது முடியாத காரியம் எனத்தோற்றவே, எவ்வழியாலும் தகுதியுடைய ஒரு துணைவரை அடைவதற்காக முயற்சி செய்துகொண்டிருக்க, நமது பத்திராபிமானிகளில் ஒருவரும் எனது ஆப்த நண்பருமான ஸ்ரீமாந் C. N. A. இராமய்யா சாஸ்திரியவர்கள் M. A. உதவிசெய்ய முன்வந்தார்கள். அவர்களது நன் முயற்சியினாலேயே நாகசுப்பிரமண்ணிய ராவ் பிரதேர்ஸ் இப்பத்திரிகைக்குச் சொந்தக்காரர் ஆனார்கள். ஷெ கம்பெனியார் பிரசித்திபெற்ற புஸ்தகவியாபாரிகள். இவ்விடத்திலும் திருநெல்வேலியிலும் சென்னையிலும் அவர்களுக்குச் சொந்தமான வியாபாரஸ்தலங்கள் இருக்கின்றன. சென்னை ராஜதானியின் முக்கிய பட்டணங்களில் எல்லாம் அவர்களுக்கு ஏஜண்டுகளும் இருக்கிறார்கள். ஆகவே இதுகாறும் திருவிதாங்கோட்டுப் பத்திரிகையாக இருந்த தமிழன் இப்பொழுது சென்னை ராஜதானிப் பத்திரிகையாக நிற்கும் பெருமையும் பெற்றுவிட்டான். சென்ற ஐந்து வருஷங்களாக நான் செய்து வந்த நன்முயற்சிகள் எல்லாம் தற்காலத்திய மங்களகரமான நிலைமையை அடைந்தது பற்றி நானடையும் மகிழ்ச்சியை எழுதி விளக்க நான் அசக்தனாக இருக்கிறேன். இதற்கெல்லாம் காரணம், இப்பத்திரிகையின் உற்பத்திக்கு முதன்முதல் 10-பவுன் நன்கொடையளித்த எனது காவலன் ஆண்டிப்பட்டி ஜெமீன்தார் ஸ்ரீமாந் S. Rm. M. Ct. பெத்தாச்சி செட்டியாரவர்களின் கைநலமென்பதே எனது முழு நம்பிக்கை. நம் பத்திரிகையின் பிற்கால ஜீவிதம் மிக க்ஷேமகரமாயிருக்குமென்பதற்கு, அதற்குத் தற்காலம் சொந்தக்காரராகவும், கூட்டுப் பத்திராதிபராகவும் ஏற்பட்டிருப்பவர்களின் நாமங்களே போதிய சான்றும். இதுகாறும் பொருளுதவியும், விஷயங்கள் எழுதியும் என்னை ஆதரித்து வந்த பத்திராபிமானிகளுக்கும் காவலர் ஆண்டிப்பட்டி ஜெமீன்தார் அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியறிதலைச் செலுத்துகின்றேன். மேலும் இவர்கள் எல்லாம் முன்போலவே இப்பத்திரிகையை ஆதரித்து வருவார்கள் என்றும் நம்புகின்றேன்.

S. முத்துசுவாமிப் பிள்ளை.

Neuter terminations and their after-history.

C. N. Ananta Ramayya Sastri Esq. M. A.

Dr. Robert Caldwell derives the masculine and feminine terminations in the Dravidian languages from words denoting man and woman. He mentions an exception in Telugu and Gond and to a less extent in the other languages where the neuter termination is employed for denoting the feminine gender also. In Telugu "Adi" denotes it as well as she and "Chinnadi" may mean *a small thing* or *a girl*. The Tamil word Velalatti and the Canarese word Arasiti (queen) seem to have identical suffixes. Dr. Caldwell gives these very words for evidence of the identity and says further that "the Telugu form of the demonstrative neuter singular, *viz adi*, it, which is used systematically by Telugu to signify *she*, is the root from whence they have all proceeded."

It is the purpose of this article to show that all the genders have been evolved by a process of allotment. Tu or du, Al, Am, A (அ) U, (குற்றியலுகரம்), Ai, these six terminations are met with in Tamil neuter nouns. There are corresponding terminations in the other Dravidian languages also. Among the half a dozen endings given above, the first is responsible for the terminations in Velalatti, Arasiti and Chinnadi. In Tamil and Malayalam, the indistinct *U* is changed into *I* இ and the consonant is doubled probably by the action of the Aydam, அஃது becoming அத்து. The second termination *Al* is found in the Telugu *maradalu* மருமகள் and *kodalu* (connected with கோதை). It is also lengthened in Telugu and in the Ku dialect. In the feminine words of the other languages, ல், I consider, has been changed into ள். This same *al* is employed as a plural termination and there ல் is changed into ள் in Tamil, Malayalam and Canarese and Aydam makes அள் into கள். *Am as a masculine termination is found in* Ancient Canarese and precedes the *anu* of the modern Canarese which fact is ignored by the eminent doctor and his followers. *Am* was sometimes changed into அன் which is found rarely in feminine nouns as Amman, and Akkan (Travancore) and abundantly in masculine nouns. அ the fourth termination, brought in the neuter plural form வந்தன and the பெயரெச்சம் participle on the one hand, and the genitive case in Canarese on the other, in both of which it is linked to a noun or the neuter suffix *tu* or *du*, கொடுத்த and ಮರದ (Canarese) being கொடுஃது + அ and மரது + அ respectively. The fifth *viz* குற்றியலுகரம், by itself, is rarely found in the masculine and feminine genders. But the last *viz* ஐ is common enough in feminine nouns like கோதை, as in neuter ones like இலை.

I have to add that அ as a neuter termination in Tamil is preserved as a relic in the imperative form எழுதுக, that அன் as a neuter termination is found in forms like கடன், that அர் in சுடர், முன்னர் etc. and அவர், and ஆர் are brought about by ல் changing into ர், and that the plural suffix மார் is nothing but an enunciative ம் with ஆர்.

The local English magazine has already published the further history of the neuter termination து found in the வினையெச்சம் participle with து, and the corresponding past tense forms. The பெயரெச்சம் forms of the வினை யெச்சம் participles with த in Tamil, are thus in my opinion, coeval with the possessive case with அ in Canarese, they being composed of the verbal root and the terminations து and அ.

பூமி.

ஸ்ரீமான் R. ஸ்ரீநிவாஸனவர்கள் M. A.
கணிதசாஸ்திரப் "ப்ரொபஸர்"

1. அதன் உருவம்.

முன்காலத்தில் அநேகம் ஜனங்கள் நாம் வசிக்கும் பூலோகத்தைத் தட்டையான ரூபத்தையுடையதாக நினைத்திருந்தார்களென்று நாம் கேள்விப்படுகிறோம். இப்போதும் நாம் கண்ணால் நோக்குங்காலங்ஙனமே அபிப்பிராயங்கொள்ளல் தவறல்லவென்று தோன்றும். நமது இந்திரியங்களிலொன்றாயுள்ள கண்ணைக் கொண்டுமாத்திரம் இதின் உண்மையை யறிவது கஷ்டம். ஆனால் நமது புத்தியைக் கொண்டு ஆலோசித்து நமக்கு நேரிடுகிற அநுபவங்களையு மாராய்ந்து பார்ப்போமானால் பூமியின் உண்மையான ரூபம் நன்கு விளங்கும்.

இதற்கு "பூகோளம்" என்று பெயர் வழங்கி வருகிறதே, அது உருண்டையான ஒரு பதார்த்தம் என்பதைத் தெளிவாக்குகிறது. நமது ஹிந்துமத சாஸ்திரங்களில் ஒன்றான பூகோளசாஸ்திரத்தில் இவ்விஷயம் நன்றாகத் தெளிவாக்கப் பட்டிருக்கிறது. ஏதோ சில கிரந்தங்களில் வர்ணனையின் நிமித்தமாகவோ, அல்லது பொது ஜனங்களுக்கு வேறு ஏதாவது விஷயத்தைச் சொல்லும்போது உதாரண நிமித்தமாகவோ இந்தப் பூமியைத் தட்டையாகக் கூறியிருக்கக் கூடும். ஆனாலவ்வார்த்தைகள் சாஸ்திரப் பிரமாணங்களாக எடுத்துக்கொள்ளத் தகுந்தவையல்ல. மேலுமதைக் கொண்டு புராதன ஹிந்துக்களுக்குப்பூமியின் ரூபம்தெரியாது என்று நிச்சயிக்கவும் முடியாது. இப்பூமியைப் பற்றியும் இந்த ஸூரியமண்டலத்தைப் பற்றியும் அநேக விஷயங்கள் நம்முன்னோர்களால் கூறப்பட்டிருக்கின்றன. அவைஇக்காலத்துப் பச்சிமதேசத்து ப்ராக்ருதி சாஸ்திரிகளுடையவும் ஜோதிட சாஸ்திரிகளுடையவும் அபிப்பிராயங்களுக்கிணங்கவே இருக்கின்றன.

எக்காரணங்கள் கொண்டு நாம் பூமி உருண்டையானதென்று தீர்மானிப்பது? பார்த்தால் மேடும்பள்ளமுமாயுள்ள ஒரு கணக்கிலுமடங்காத தரைபோலல்லவோ தோன்றுகிறது! இந்தப் பூமி வெகு பெரிதானதால், அதனெதிரில் பதர்போலிருக்கும் நமக்கு அதன்மீதுள்ள மேடுபள்ளங்கள் பிரமாதமானதாகத் தோன்றுகின்றன. வாஸ்தவத்திலவை யதிகமாக கவனிக்கத்தக்கவை யல்ல. ஒரு எலுமிச்சம் பழத்தை நோக்கினால் நமது கண்களுக்கது வட்டமாக இருப்பதாகவே தோன்றும். ஆயினும் ஒரு பூதக்கண்ணாடியைக் கொண்டு அதைப் பார்த்தால் அதன் பேரில் அநேக பள்ளங்களும் மேடுகளுமிருப்பதாக காணுவோம். வெகு சிறிதான ஒரு பிராணி, அவ்வெலுமிச்சம் பழத்தின் மீது ஸஞ்சாரம் செய்வதானால் அதற்கு அப்பள்ள மேடுகள் நமக்குப் பூமியின்மீது தோன்றும் மேடுபள்ளங்கள் போலவே இருக்கும். ஆனால் வெளியில் நின்று பொதுவாய் அவ்வெலுமிச்சம்பழத்தைக் காணும் நமக்கு அதினுடைய உருண்டைத் தன்மை நன்றாய்த் தெரியும். அவ்விதமே நாம் இப்பூமியைவிட்டுவெளியிற்போய் நின்று இதை ஒருமிக்க நோக்குவோமானால் இதின் உண்மையான உருண்டை ஸ்வரூபம் நமக்குத் தெரியவரும். ஆனால் இப்பூமியை விட்டு வெளியே போயிதைப் பார்க்கிறது சாதாரணமாக சாத்தியமான காரியமல்லவே, பின் எப்படி நாமதினுருவத்தை யறியலாமென்றாலோ, அதற்கு அநேகம் வழிகளுள. அவைகளிற் சிலவற்றை இங்கே கூறுவோம்.

(1) இப்பூமி தட்டையாயிருக்குமாகில் ஒருவன் ஓரிடம்விட்டுப் புறப்பட்டு ஒரே திக்காக நோக்கிப் போவானானால் அவன் போகப்போக, தான்புறப்பட்ட இடத்திலிருந்து அதிகமான தூரத்திலிருப்பானேயல்லாது அதை யணுகமாட்டான். இது எல்லாருக்கும்தெரிந்த விஷயமே. ஆனாலது வட்டமாயிருக்குமாயின் என்ன நேரிடும்? எலுமிச்சம் பழத்தின்மீது ஒரு சிறிய எறும்பு ஊருகிறதாக வைத்துக்கொள்வோம். அது ஒரே திசையாகப் போகுமேயானால் கடைசியிலெங்கு போய்ச் சேரும்? இப்படத்தை நோக்குக! அ என்கிற இடத்திலிருந்து புறப்பட்டு, கடிகாரத்தின் முள்ளுகள் போகும் வண்ணம் போவதாக வைத்துக் கொள்வோம். கொஞ்சநேரம் கழித்து இ என்கிற இடத்தையடையும், பிறகு க, ச என்கிற இடங்களைச்சேரும், கடைசியில் தான் புறப்பட்ட இடமாகிய அ என்கிறவிடத்திற்கே வந்து சேரும்.



இங்ஙனமே ஒரு மனிதன் பூமியின்மீது, எலுமிச்சம் பழத்தின்மீது எறும்பு நகர்ந்தது போல் ஸஞ்சரிப்பானானால், பூமி உருண்டையாயிருக்கும் பக்ஷத்தில், தான் புறப்பட்ட இடத்தையே அடைவானல்லவா? அநுபவத்திலுமப்படியேதானிருக்கிறது. தான் ஒரு உருண்டையின்மீது ஸஞ்சரிக்கிறது தெரியாமலே தான் புறப்பட்ட இடத்தையடைகிறான். இவ்வித மேற்படவேண்டுமானால் பூமி தட்டையான விஸ்தீர்ணமாயில்லாமல் கிட்டத் தட்ட

உருண்டையான ஒரு ரூபமுடையதாகவே தானிருக்க வேண்டும்

(2) ஸமுத்திரக் கரையில் நின்றுகொண்டு கரை விட்டகலும் ஒரு கப்பலைக் கவனித்துக் கொண்டிருந்தால் அது கரையினின்றும் அதிக தூரம் போகும் போது அதனடிப்பாகம் மறையத் தொடங்குகிறது. பூமி தட்டையாயிருக்கும் பக்ஷத்தில் அக்கப்பல் எவ்வளவு தூரம் சென்றபோதிலும் அது மறையக் காரணமேயில்லை. போகப்போக கண்ணிற்குச் சிறிதாகத் தோன்றக்கூடும், ஆனாலதிலொருபாகமும்மறைவுபடக் காரணமேயில்லை. பூமி உருண்டையாயிருக்கும் பக்ஷத்தில் அக்கப்பல் தன்னடிப்பாகத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மறைய ஆரம்பிக்கும். சிறிது காலத்தில் முழுவதும் மறையும். பக்கத்திலிருக்கும் படத்தினின்று மிது நன்கு விளங்கும்.



1 என்ற இடத்திலிருந்து புறப்பட்டால் கொஞ்ச தூரம் போகும் வரையில் அக்கப்பலின் முழுப்பாகமும் தெரியும். 3 என்கிற இடத்தை யது அடைந்தால் கீழ் பாகத்தில் கொஞ்சம் மறைகிறது. 4 என்கிற இடத்தில்மேற் பாகத்தில் கொஞ்சந்தான் தெரிகிறது. 5 என்கிற இடத்திற்குச் சென்றுவிட்டால் முழுவதும் மறைவுபடுகிறது. பூமி உருண்டையாயில்லாதிருக்குமே யானல் இத்தகைய ஸம்பவம் நேரிடமாட்டாது.

(3) பூமியின்மீது இரண்டு இடங்களில் உச்சிக்கு நேராக இரண்டு பெரிய கோல்களை நாட்டினால் அவைகள் பின்வரும் படத்திலிருப்பதுபோல் காணப்படும். அஉ, இக ஆகிய இரண்டு சமநீளமுள்ள தடிகள் அ, இ என்கிற இடங்களில் உச்சிக்கு நேராக(vertically) ஆகாயம் நோக்கி நாட்டப் பட்டிருக்கின்றன. பூமி தட்டையாயிருக்கும் பக்ஷத்தில் அஇ யின் நீளமும் உக வின்நீளமும் ஒன்றாகத்தானிருக்கும், ஆனால் அளந்து பார்க்கும் பக்ஷத்தில் உக அஇ யைவிட அதிக நீளமாகக் காணப்படுகிறது. இது பூமி உருண்டையாயிருப்பதால் தான் ஏற்படுகிறது.



(4) மேலும் அ, இ இவ்விடங்களுக்கு நடுவில் ச என்கிற ஒரு இடத்தில் அதே நீளமுள்ள சட என்கிற ஒரு தடியை நாட்டினால், நாம் உ விலிருந்து க வை நோக்குங்கால் ட என்பது உக என்கிற கோட்டின் மேல்பாகத்தில் இருக்கிறதாகக் காணப்படுகிறது. பூமி தட்டையாக இருக்குமேயானல் உ, ட, க இம்மூன்றும் ஒரே கோட்டிலல்லவோ காணப்படவேண்டும். அப்படியில்லாமல் ட மேலே காணப்படுவது பூமி உருண்டையாயிருப்பதினாற்றான்.

(5) சந்திர கிரஹணம் பூமியின் சாயையாலுண்டாகின்றதென்பது எல்லாரும் ஒப்புக் கொள்ளத் தகுந்த விஷயமே. சந்திரன் பூமியைச் சுற்றுகிறதென்பதும், பூமி சூரியனைச் சுற்றுகிறதென்பதும் எல்லாருக்கும் தெரிந்த விஷயமேயாகும். சந்திரனுக்கு ஸ்வயமான ஜோதி கிடையாது. சூரியனிடத்திலிருந்து வரும் வெளிச்சத்தைக் கொண்டுதான் அது பிரகாசிக்கிறது. அது பூமியைச் சுற்றி வரும்போது சில சமயங்களில் சூரிய வெளிச்சத்தில் ஏற்படுகிற பூமியின் நிழலில் மறைபடுகிறது. அந்தச் சமயத்தில் சூரியனிடத்திலிருந்து சந்திரனுக்கு வரும் வெளிச்சத்தைப் பூமி மறைக்கிறது. ஆகையால் தான் சந்திர கிரஹணம் உண்டாகிறது. அந்தச் சமயத்தில் சந்திரனில் மறைபட்டிருக்கிற பாகத்தின் வரையைப் பார்த்தால் அது ஒரு வட்டமாகவே தோன்றுகிறது. இது எல்லாருடைய அனுபவத்திற் குள்ளும் வந்திருக்கக் கூடிய விஷயமே. அந்தச்சாயையோ பூமியாலேற்படுகிறது. ஆகையால் பூமி வட்டமாகத் தானிருக்க வேண்டுமென்பது தெளிவாகிறது.

இத்தகைய காரணங்களைக் கொண்டு பூமியின் உருவமுருண்டையானதென்றே தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

R. Sreenivasan M. A.

Professor.

எலிமென்டரிப் பாடசாலைகளில் கைத்தொழில் பயிற்று வித்தல்.

ஸ்ரீமாந் S. VE. A. மாணிக்கம் செட்டியார் அவர்கள்.

திருவிதாங்கூரின் மொத்த ஜனத்தொகை 3428975. இதில் (Recognised) அங்கீகாரம்பெற்ற எலிமென்டரிப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகளின் தொகை 319138. அதாவது 100-க்கு 51.15- குடிப்பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகள் தொகையும் சேர்த்து ஆக மொத்தம் 365835. அதாவது

100-க்கு 59.64. குடிப்பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகளைத் தள்ளிவிட்டாலும், அங்கீகாரம்பெற்ற பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகள்மட்டும் சமஸ்தானத்திலுள்ள மொத்தப்பள்ளிப் பருவப்பிள்ளைகளில் 100-க்கு 51.15 ஆகவிருக்கிறார்கள். ஆகவே நாட்டிலுள்ள பள்ளிப்பருவப் பிள்ளைகளில் பாதிக்குமேல் எலிமென்றரிப்பாடசாலைகளில் கல்வி கற்றுவருவது திருவிதாங்கூர் கவர்ன்மென்றாருக்குப் பெருமையைத் தரத்தக்கதே. எலிமென்றரி வித்தியாப்பியாசத்தை இலவசமாக்கி அதனாலுண்டாகும் பணச்செலவைப் பெரிதாக மதியாது பிரஜைகளின் க்ஷேமத்தையே மேலானதாகக் கொண்டு ஒருமயிலுக்கொரு எலிமென்றரிப் பாடசாலை விதம் ஸ்தாபனம் செய்து லக்ஷ்மி தேவியின் வாசமாகிய இத்திருவாழுங்கோட்டில் சரஸ்வதிதேவியும் ஓங்கி வாழும்படி கிருபை பாலித்தருளிய கருணாநிதியான நம்முடைய ஸ்ரீமூலப்பெருமான் அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் என் தாலூகாவாசிகளின் பிரதிநிதியாக என்னுடைய இருதயபூர்வமான நன்றியறிதலையும், வந்தனத்தையும் செலுத்துகிறேன்.

தேசபாஷாபிவிர்த்தியின் பொருட்டு வித்தியாப்பியாச டிப்பார்ட்டுமென்றை இரண்டாகப் பிரித்து தேசபாஷைக் கல்வியை மட்டும் மேல்பார்த்துக்கொள்ளும்படி வித்தியாப்பியாச டிப்பார்ட்டுமென்றில் நல்ல அநுபவமும், இந்த நாட்டின் வித்தியாப்பியாச நிலைமையைப் பற்றிப் பூரணமான அறிவும், தேசபாஷாவித்தியாப் பியாசப் பிரசாரத்தில் மிகுந்த பிரீதியும், ஊக்கமும், உழைப்புமுடைய பிரம்மஸ்ரீ பி. இராமசுவாமி ஐயரவர்களை டிப்யூட்டி டயரக்டராக நியமித்து, தேசபாஷா வித்தியாப்பியாச வளர்ச்சிக்கு அடிஸ்தானமிட்டுத் தற்காலக் கல்வியின் மெய்யான நோக்கத்தை நிறைவேறச் செய்த மதியூகியும், ராஜ்ஜியதந்திர நிபுணருமான கனம் பொருந்திய திவான் பஹதூர் எம். கிருஷ்ணன் நாயரவர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் என் மனப்பூர்வமான வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

மேலேகூறிய 319238 பிள்ளைகளும் பெரும்பாலும் நாட்டுப்புறவாசிகளான ஏழைகளே என்பதை கவர்ன்மென்றார் உணரவேண்டும். இவர்களே பிற்காலத்தில் நாட்டுக்கு ஆதாரவாக நிற்கவேண்டிய பௌரன்மாராயிருக்கிறார்கள்.

இந்த சமஸ்தானத்திலுள்ள செல்வப்பெருக்கத்துக்கும், நாகரீகவளர்ச்சிக்கும் இவர்களே அடிப்படையாக இருக்கிறார்கள். ஆகவே இவர்களுடைய நன்மைக்கான காரியங்களைப்பற்றி நாம் ஆறத்தேற ஆலோசித்து ஒரு சாச்வதமான ஏற்பாடு செய்யாமலிருப்போமானால் நாம் திருவிதாங்கூரின் பிற்காலவளர்ச்சியைக் கவனிக்காமல் உபேக்ஷையாயிருந்தவர்களாவோம். அப்படி இருக்க திருவிதாங்கூர் சமஸ்தானத்தைப்பற்றி உண்மையான அபிமானமுடைய எந்த ராஜபக்தனுக்குத்தான் மனம்வரும். ஆகையால் எலிமென்றரிப் பாடசாலைகளில் கல்வி கற்றுவரும் 31923 பிள்ளைகளின் நிலைமையைப்பற்றிச் செவ்வையாய் ஆலோசிக்க வேண்டியது கவர்ன்மென்றாரையும், ஜனங்களையும் பொறுத்த கடமையாகவிருக்கின்றது.

இந்த நாட்டின் முக்கிய உபஜீவனமார்க்கம் கிருஷியே. ஆனால் சொந்தக் கிருஷி செய்ய நன்செய் புன்செய்கள் உள்ள குடிகளின் தொகைமிகச் சொற்பம். முன்சொன்ன 319238 பிள்ளைகளில் பெரும்பாலாரும் சொந்தக் கிருஷிக்குச் சௌகரியமில்லாத ஏழைக்குடியானவர்களின் பிள்ளைகளே. இந்தப் பிள்ளைகளெல்லாம் உபஜீவனமார்க்கமாகக் கருதுவது அவர்கள் படிக்கும் படிப்பைத்தான்.

எலிமென்றரிப் படிப்பைக் காருண்ணிய கவர்ன்மென்றார் இலவசமாக்கியிருந்தாலும் புத்தகச் செலவு முதலியவைகளைத் தாங்குவதும் இந்த ஏழைப் பிள்ளைகளின் பெற்றோருக்குப் பெரும் பாரமாகவேயிருக்கிறது. படாத பாடெல்லாம் பட்டுப் படிப்பித்தாலும், முக்கால் பங்குக்குமேல் லோயர் கிரேட் எலிமென்றரிப் பள்ளிக்கூடப் படிப்போடு விடுகட்ட வேண்டியதாக ஏற்படுகின்றது. ஏனென்றால் மிக்க இடங்களிலும் ஹயர்கிரேட் எலிமென்றரிப் பாடசாலைகளில்லை. இவ்விதமாக லோயர்கிரேட் எலிமென்றரிப் படிப்போடு நின்றவர்களுக்கு கவர்ன்மென்று உத்தியோகங்களுக்கு வழியுண்டா? ஸ்கூல்பைனல் பாஸான பிள்ளைகளே உத்தியோகம் உண்டா உண்டா என்று தேடியலையும் இக்காலத்தில் லோயர்கிரேட் எலிமென்றரிப் படிப்பாளிகள் கதி அதோகதியாகத்தானிருக்கிறது.

இனி ஹயர்கிரேட் எலிமென்றரி வித்தியாப்பியாசத்துக்குப் போனவர்கள் நிலைமையைக்கவனிப்போம். தோட்டத்தில் பாதி கிணறு என்பதுபோல் பாடப்புஸ்தகங்களின் தொகையும், விலையும் நாளுக்குநாள் ஏறிக்கொண்டே வருகிறது. பாடப்புஸ்தகக் கம்மிற்றியார் நூலாசிரியர்களின் நன்மையை மட்டும் கவனிக்

கிருர்களை தவிர பிள்ளைகளின் நிலைமையைக் கொஞ்சமாவது எண்ணுகிருர்களில்லை. நித்திய காலக்ஷேபத்துக்கே வழியில்லாத ஏழைக்குடியானவர்கள் கடன் பட்டும், கஷ்டப்பட்டும் தங்கள் பிள்ளைகளைப் படிப்பிக்கிருர்கள். ஏனென்ருல் பிள்ளைகள் எலிமென்டரிப் பரீக்ஷையில் தேறினவுடன் ஸர்க்கார் உத்தியோகம் கிடைத்துவிடுமென்றும், பின்னர் தங்கள் வறுமையெல்லாம் ஓடிவிடுமென்றும் அவர்கள் நம்பியிருக்கிருர்கள். இந்த நம்பிக்கையோடு பள்ளிக்கூடங்களில் அனுப்பப்படும் பிள்ளைகளில் மிகச் சொற்பப்பேரே எலிமென்டரிப் பரீக்ஷையில் தேர்ச்சியடைந்து கவர்ன்மென்று வேலைக்கு லாயக்குடையவர்களாகிருர்கள். இவ்வாருக எலிமென்டரி ஸர்ட்டிபிக்கற்றுப் பெற்ற பிள்ளைகளும், அவர்களுடைய பெற்றேர்களும், பந்துக்களும் தங்களுடைய பாக்கியமெல்லாம் அந்த ஸர்ட்டிபிக்கற்றில் அடங்கியிருக்கிறதாக ஆநந்தஸாகரத்தில் ஆழ்ந்துவிடுகிருர்கள். ஸர்ட்டிபிக்கற்றை வெளியிலெடுத்து உத்தியோகம் தேடப்போகும் போது தான் அதன் மாற்று வெளிப்படுகிறது. ஸர்ட்டிபிக்கற்றின் விலையோகுறைந்தால் மாதம் 7 ரூபாய்; கூடிஞல் 15 ரூபாய். சிவ! சிவ! இந்தச் சொற்பத் தொகையைக்கொண்டு நித்தியகாலக்ஷேபம் செய்வதெப்படி? படிப்புக்காக வாங்கின கடனைத் தீர்ப்பதெப்படி? நன்செய் புன்செய் வாங்குவதெப்படி? ஐயோ! ஆநந்தக்கடலில் ஆழ்ந்திருந்த பெற்றேர்களும், பிள்ளைகளும் ஏங்கி, ஏங்கி நாட்போக்கத் தொடங்குகிருர்கள்.

ஆக மொத்தமுள்ள 3,19,238 பேரில் எலிமென்டரி ஸர்ட்டிபிக்கற்றுப் பெற்ற சொற்பப்பேரின் கதி இப்படியானல் மற்றவர்கள் பாட்டைச் சொல்லவும் வேண்டுமா? பிள்ளைகளின் பலாபலத்தைப் பார்த்தால் எலிமென்டரிப் பரீக்ஷையில் தேறினவன் பாடும், தேருதவன் பாடும் ஒருப் போலவே இருக்கிறது. ஆறேழு வருஷம் கஷ்டப்பட்டுப் படித்தவனுக்கு தினம் 4 சக்கரம் நியாயமாக சம்பாதித்துக் காலக்ஷேபம் செய்வது வெகு கஷ்டமாக இருக்கின்றது. பள்ளிக்கூடத்தில் மழைக்குக்கூட ஒதுங்காமல், நெசவோ, தச்சுவேலையோ, கொல்லவேலையோ தையல்வேலையோ கற்றுக்கொண்ட தொழிலாளி அதிகப் பிரயாசையில்லாமல் நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் முதல் மூன்று ரூபாய் வரை எளிதில் சம்பாத்தியம் செய்து சுகமாக காலக்ஷேபம் செய்கிருன். இப்படியாகப் படித்தவன் பாடு திண்டாட்டமாகவும், படியாதவன் பாடு கொண்டாட்டமாகவும் இருக்கிறது. இதனாலே படித்தவர்களெல்லாம் தரித்திரர்களாகவே இருப்பார்களென்றும், காரணம் ஸரஸ்வதி தேவிக்கும், லக்ஷ்மி தேவிக்குமுள்ள சக்களத்திப் பகையேயென்றும் அதனால் படியாமலிருப்பதே உத்தமமென்றும் நாட்டுப்புறங்களிலுள்ள அறிவற்ற ஜனங்கள் எப்படியோ குருட்டுத்தன்மாக நம்பியிருக்கிருர்கள். இந்த நம்பிக்கைதப்பானதானுலும் அநுபவத்தில் படித்தவன்பாடு காலட்சேபத்துக்குக் கஷ்டமாகவே இருக்கிறது. ஆகையால் நமது சமஸ்தானத்தின் பிற்காலக்ஷேமத்தைத் தாங்கும் தூண்களாக இருக்கும் இந்த 319238 பிள்ளைகளையும் கொடிய தரித்திரத்தின் வாயில்நின்றும் விடுவிக்க வேண்டியது கவர்ன்மென்ருரைப்பொறுத்த முக்கிய பாரமாகவிருக்கிறது.

இனி அதற்கு வழி யென்னவென்று ஆலோசிப்போம். நம் நாட்டார் தொன்று தொட்டே பின்பற்றிவருகிற தச்சுவேலை, கொல்லவேலை, பொன் செம்பு வேலை, நெசவு, கயிறு முறுக்கல், கூடை முடைதல், கொத்துப் பணி முதலிய தொழில்கள் தவிர இன்னும் அநேக நூதன கைத்தொழில்களுக்கு நம்முடைய நாட்டில் ஏராளமான வசதிகளிருக்கின்றன. பட்டுப்புழு வளர்த்தல் ஓர் நல்ல லாபகரமான முதலீடில்லாத கைத்தொழிலென்றும, அதற்கு வேண்டிய சௌகரியங்களெல்லாம் நம்முடைய சமஸ்தானத்தில் பூர்ணமாக நிறைந்திருக்கின்றனவென்றும், அவ்விஷயத்தை பற்றிக் கொஞ்சமாவது ஆலோசித்தவர்களெல்லாம் ஒப்புக்கொள்ளுகிருர்கள். தவிரவும் நாம் வீணுய்க்களைகிற வாழைநாரை பதப்படுத்தி உரித்தெடுத்தால் அநேக விலையுயர்ந்த பொருள்கள் செய்வதற்கு உபயோகப்படுமென்று அறிவாளிகளொப்புக்கொள்ளுகிருர்கள். அதுபோலவே விறகுக்காக மட்டும் உபயோகப்படுத்திவருகிற சிரட்டையிலிருந்து புத்தான்கள் (Buttons) உண்டாக்கலாமென்றும் அறியப்படுகின்றது. இவ் வழிகளில் அநேகர் முயற்சித்து நல்ல பலனும் கண்டிருக்கிருர்கள். ஆகையால் பழய தொழில்களைச் சீர்படுத்தி அவைகளையும், புதிய கைத்தொழில்களையும் இந்த சமஸ்தானத்திலுள்ள எலிமென்டரிப் பாடசாலைகளிலெல்லாம் அந்தந்த இடத்திற்குத் தக்கபடி நிர்ப்பந்தமாகபடிப்பிக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்பதே என்னுடை தாழ்மையான அபிப்பிராயம். இப்பொழுது ஆறிடங்களில் நான் விரும்புகிறபடி தொழிற்கல்வியும் நிர்ப்பந்தமாகப் படிப்பித்துவர ஏற்பாடு செய்திருக்கிறதாக அறிகிறேன். இதனுல் கவர்ன்மென்ருரும், நான் சொல்லுகிறவிஷ

யத்தின் அவசியத்தை உணர்ந்திருக்கிறார்களென்று ஊகிக்க இடமுண்டாயிருப்பதில் எனக்குப் பெரும் சந்தோஷம். இம்மட்டாவது தொழிற்கல்விக்கு அடிஸ்தானமிட்டதற்காக நமது காருண்ணிய மஹாராஜா அவர்களுக்கும், திவான்ஜி அவர்களுக்கும் மிகவும் நன்றி பாராட்டுகிறேன்.

பட்டணங்களிலும் பட்டணங்களையடுத்த ஊர்களிலுமுள்ள எலிமென்றரிப் பாடசாலைகளில் தையல், புக்பயிண்டு செய்தல், கடிகாரம், சைக்கிள் முதலியன பழுது பார்த்தல் (Board Printing) அல்லது பலகையில் சாயங்கொண்டு எழுதல் முதலிய தொழில்களைப் படிப்பித்தால் அதிக உபகாரமுண்டென்று பூர்ணமாய் நம்புகிறேன். இவ்வாறு எலிமென்றரிப் பாடசாலைகளில் அந்தந்த இடத்திற்குத் தக்க தொழிலைப் படிப்பிக்க கவர்ன்மென்றார் கருணை கூர்ந்து ஏற்பாடு செய்தால் இந்த சமஸ்தானத்திலுள்ள பள்ளிப்பருவம் பய்யன்களின் பரிதாபகரமான நிலைமைமாறி அவர்கள் சுகமாக வாழக் காரணமாகும். தொழில்களைப் படிப்பித்தால் பள்ளிப் பையன்களெல்லாம் கவர்ன்மென்று வேலையை நம்பி ஏமாந்துபோக இடமில்லை. கவர்ன்மென்று வேலை கிடைக்கும் பாக்கியமுள்ளவர்களும் ஒய்வு நேரங்களில் ஏதேனுமொருதொழில் செய்து புது வரும்படியை அடைவார்கள். நாட்டில் தரித்திரம் தலைகாட்டாதொழியும். ஒழியவே செல்வம் செழித்தோங்கும். இதுவுமன்றி இன்னொரு குணமுமிருக்கின்றது.

தற்கால முறைப்படி படிக்கும்பிள்ளைகள் காலட்சேபத்துக்கு வழியில்லாமல் திண்டாடுகிறார்களென்ற பயத்தினாலேயே சமஸ்தானத்திலுள்ள பள்ளிப் பருவப் பய்யன்களில் பாதிப்பேரையும், அவர்களுடைய பெற்றோர்கள் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புகிறார்களில்லை. நான் சொன்னபடி பள்ளிக்கூடங்களில் தொழில்கள் படிப்பிக்கப்பட்டு, பிள்ளைகளுக்கு வயிற்றுப் பிழைப்புக்கு ஒரு வழியுமுண்டாகுமானால், நாட்டிலுள்ள பள்ளிப் பருவப் பையன்களெல்லாம் பள்ளிக்கூடம் போகத் தொடங்கிவிடுவார்கள். கொஞ்சக் காலத்தில் அக்ஷராப்பியாசமில்லாதவர்களை நாடெங்கும் தேடிப் பார்த்தாலும் மருந்துக்குக்கூடக் கிடையாமலாய்விடும். நிர்ப்பந்தப் படிப்பு ஏற்பாட்டை கவர்ன்மென்றார் நடப்பாக்கவேண்டிய அவசியமே உண்டாகாது. இவ்வாறு பிரதமக் கல்வியபிவிர்த்திக்கு ஒரு மார்க்கமாகவிருக்கிற தொழிற் கல்வியை நம்முடைய நாட்டுப் பள்ளிக்கூடங்களில் எல்லாம் நடப்பாக்கவேண்டியது மிகவும் அவசியமென்று பின்னும் ஒருமுறை வற்புறுத்திச் சொல்லுகிறேன்.

கைத்தொழில் ஸர்வே செய்வதற்காக கனம் டாக்டர் (Barker) பார்க்கர் துரையவர்களை கவர்ன்மென்றார் இப்பொழுது நியமித்திருப்பது குடிகளுக்குப் பெரும் மகிழ்ச்சியைக்கொடுத்திருக்கிறது. அந்த ஸர்வே முடிந்தவுடன் நான் சொன்ன விஷயம் கவனிக்கப்பட்டு எலிமென்றரிப் பள்ளிக்கூடங்களில் தொழிற் கல்விக்காக ஏற்பாடு செய்யப்படுமானால் நமது கிருபாநிதியாகிய மஹாராஜா அவர்கள் அரசாட்சிக்குப் பொதுவாகவும், திவான்ஜி அவர்கள் பேருக்குச் சிறப்பாகவும், பெருமையும் கீர்த்தியும் உண்டாவது நிச்சயமென்றும், அப்படித் தொழிற்கல்வி நடப்புவரும் காலமே இந்த நாட்டின் பாக்கியோதய காலமாகக்கருதப்படுமென்றும் பலமுறை கூறி என்னுடைய பிரசங்கத்தை முடிக்கிறேன்.

S. VE. A. மாணிக்கம் செட்டியார்.

நாஞ்சிநாட்டு மருமக்கள்வழி மான்மியம்.

(பத்திராதிபர் S. M.)

இவ்வேடு நம் கைக்கெட்டிய வரலாற்றை முன்னரே தெரிவித்துள்ளோம். இது திருவிதாங்கோட்டுத் தமிழர்களில் ஒரு முக்கிய வகுப்பாராகிய நாஞ்சிநாட்டு மருமக்கள்வழி வேளாளரின் சமுதாயச் சீர்திருத்த விஷயமான ஒரு நூல். இவர்கள் தாயக்கிரமத்தில் மட்டும் "மருமக்கத்தாயிகளாய்" இருக்கிறார்களே அன்றி மற்ற விஷயங்களில் எல்லாம் மக்கள்வழி வேளாளரையே ஒத்திருக்கின்றனர். இந்த சமுதாயத்தார் மதுரை திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களிலிருந்து இங்குவந்து குடியேறிய சுத்தத் தமிழர்கள் என்பதற்கு அத்தாட்சிகள் பலவுள. இவர்கள் பூர்வ சரித்திரத்தை இப்பத்திரிகை வாயிலாகவே வெளியிடக்கருதி இருப்பதால் இப்பொழுது விரித்தெழுதத் துணியவில்லை.

இந்த நூல் ஒரு பிரத்தியேக சமுதாயத்தாரைப் பற்றியதாகையால் இதில் அநேகதிசைச் சொற்கள் (Provincialisms) இடம் பெற்றிருக்கின்றன. அவை

களை நீக்கிச் செந்தமிழ்ச் சொற்களைச் சேர்க்குமயன்ருல் நூலின் அழகே குன்றிப்போக இடமாகும். அன்றியும் விரிவுடைய தமிழகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் வழங்கும் திசைச்சொற்களை மற்றப்பகுதியிலுள்ளாரும் அறிந்திருக்கவேண்டியது அவசியமே அன்ரோ. ஆதலின் வேண்டியவிடத்து திசைச் சொற்களை விளக்கக்குறிப்புகள் மட்டும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

கதைச் சுருக்கம்.

நாஞ்சினாட்டு மருமக்கள்வழி வேளாளர் குலத்தில் பிறந்த ஒரு பெண் தன் ஜீவிதகாலத்தில் அநுபவித்த கஷ்டங்களை யெல்லாம் எடுத்துச்சொல்லி வருந்துகின்ருள். இவள் ஒரு ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவள். பதினாறுவது வயதில் ஒரு பிரபுவினுடைய ஐந்தாம் மனைவியானாள். கணவன் வீட்டில், மாமி சக்களத்திகள், மதினி முதலியோரால் இவள் அடைந்த துன்பத்திற்கு அளவில்லை. அங்ஙனமிருக்க, சிறிதுநாளில் இவள் கணவனுக்கும் அவன் மருமகனுக்கும் குடும்பகாரியங்களை முன்னிட்டு மனஸ்தாபம் உண்டாயிற்று. மனஸ்தாபம் முற்றி வழக்காய் முடிந்தது. வழக்குமுடியுமுன் கணவன் வியாதியில் விழுந்தான். அச்சமயம் அவனுடைய "அவகாசிகள்"* செய்த நிஷ்டூரங்களைச் சொல்லிமுடியாது. மரணத்தறுவாயில் கணவன் மக்களைக் காப்பாற்றும்படி மருமகனிடம் ஒப்புவித்தான். ஆனால் அவன் இறந்த உடன் மனைவிமக்கள் யாவரும் வீட்டிலிருந்து வெளியாக்கப்பட்டனர். அப்பொழுது தங்களுக்குள் வழங்கும் மருமக்கள்வழி, அவகாசக்கிரமத்தை மனைவி பழிக்கின்ருள்.

நூல்.

விநாயகர் வணக்கம்.

எம்பெருமானே! இணையடி பரவும்
அன்பினர் வேண்டு மவையெலா மளிக்க
யானை நீள்கரம் ஏந்திய கடவுளே!
உலகெலாம் போற்றும் ஒருவனே! உனது
தந்தையோ
என்றும் கையில் தலையோ டேந்தி
இரந்து திரிவான், இருப்பிட மில்லான்,
அம்பலந் தோறும் ஆடி அலைவான்,
அமிழ்தென நஞ்சையும் அள்ளி யுண்பான்,
பித்தனுகிப் பேயொடு குனிப்பான்,
நாடிய பொருளெலாம் நாசஞ் செய்வான்;
மாமனோ
பூமகளோடும் புவிமகளோடும்
மதித்திட வரிய வளமெலா மொருங்கு
வைகுந் திவ்விய வைகுந்தத்தில்
ஆயிரம் பணமுடி அரவணை மீதே
அறிதுயி லமர்ந்திவ் வகிலமெல்லாம்
ஆளும் பெரிய அண்ணலே யாயினும்
கபட நாடகன் கையிற் சக்கரம்
இருந்தும் எவர்க்கும் ஈயாக்கள்வன்;
ஆதலின் நீயும்
தந்தை வீடெனத் தங்கிட லின்றி
மாமன் வீடென மதிப்பிட லின்றிச்
சந்தியும் தெருவும் தண்ணீர்க் கரையும்
மரத்தி னடியும் வாழிடமாக
இருந்தனை; உன்போல் இருவழிகட்கும்
இடைவழி தங்கி இடர்ப்படும் எங்கள்
வருத்த மெல்லாம் அறிந்திட வல்லவர்
அறிந்து முற்றும் அகற்றிடும் நல்லவர்
நடுநிலை கண்ட நாயகர் வேறிங்
கொருவருமில்லை; உன்திருவடி பணிந்து
மருமக் கள்வழி மான்மியம் பாடத்
தொடங்கினன், வந்து துணைநின்றிந் நூல்
இனிது முடிய இதயம்
கனிவு செய்தெனைக் காத்தருள்வாயே!

அவையடக்கம்.

அருந்தமிழ் அகத்தியன் ஆராய்ந் திடவும்
கேள்வியிற் பெரியநக் கீரன் கேட்கவும்
கல்வியிற் பெரியனும் கம்பன் காணவும்
இயற்றிய நூலிதென் றெண்ணவும் படுமோ?
மருமக் கள்வழி யெனுமா வனத்தில்
புலிகள் குழுமோர் புல்வாயைப்போல்
வலையிற் படுமோர் மாடப் புறாப்போல்
கொள்கொம் பற்றுத் துவளும் கொடிபோல
ஒருத்தி யேழை ஒருதுணை யில்லாள்
தானும் மக்களும் தமிய ராகிப்
பொறியும் கலங்கிப் போதமும் கெட்டுப்

---

* தாயத்தார்.

புலம்பும் பொழுது, புண்ணிய சீலரே!
தொல்காப் பியமுதல் பல்காப் பியங்களும்
கற்றுத் தெளிந்த கவிவல் லோரே!
விகாரம் முற்றும் விரவி வருமலால்
பொருட்சுவை சொற்சுவை பொருந்தி வந்திடுமோ?
எதுகை மோனை இசைந்து வந்திடுமோ?
அணிகள் பற்பல அடுக்கி வந்திடுமோ?
ஆதலினிதனைப்
பதவியும் பணமும் படிப்பு மிலாதேன்
பஞ்சப் பாட்டெனப் பழித்திக ழாதீர்!
இலக்கண வழுக்கள் இருப்பினும், அவற்றை
வலித்தல் மெலித்தலாய் மதித்துக்கொண்மின்
நீட்டல் குறுக்கலாய் நினைத்துக் கொண்மின்
விரித்தல் தொகுத்தலாய் விளக்கிக் கொண்மின்
பழயன திரிதலாய்ப் படித்துக் கொண்மின்
புதியன புகுதலாய்ப் பொறுத்துக் கொண்மின்
இன்னும்
அமைக்கும் விதியறிந் தமைத்துக் கொண்மின்
(நாயேன்).
கொண்ட கருத்தைக் குறைவறக்
கண்டுகொள்வது பெரியவர் கடனே.

வெண்பா.

காரணவன்....தெப்போ! கல்யாணம் செய்வ
[தெப்போ!
வாரமிகு மக்களொடு வாழ்வதெப்போ!—தாரணியில்
எல்லாரையும்போ லிருப்பதெப்போ.... ....
.... நாம்.

(மீதப்பாகம் ஏடு பொடிந்துபோனதினால் விளங்கவில்லை.)

குலமுறை கிளத்துப் படலம்.

என்கதை கேளும்! என்கதை கேளும்!
இரக்கமுள் ளோரே என்கதை கேளும்!
நூல்களைக் கற்ற நுண்ணறி வோரே!
நடுநிலை நீதி நடத்தும் நல்லோரே!
மக்களைப் பெற்று வளர்க்கும் சீலரே!
ஏழையென் துயரம் எல்லாம் கேளும்.
காசினி மீதென் கதைபோல் இல்லை,
சீதையின் கதையும் சிறுகதை யாகும்
பாஞ்சா லியின்கதை பழங்கதை யாகும்
தமயேன் கதைக்குச் சந்திர மதிகதை
உமியாம் தவிடாம் ஊதும் பொடியாம்.
கேளும் கேளும் என்கதை கேளும்;
பதும நாபன் பாதபங் கஜம்
அணிமுடி யாக அணிதிரு மூல
மன்னர் புரக்கும் வளமலி வஞ்சி
நாட்டிற் சிறப்பெழு நாஞ்சில் நாட்டில்
தொல்லூ ராகும் நல்லூ ரதனில்
மேழிச் செல்வம் விரும்பு வேளாளர்
குலத்திலோ ரெளிய குடியிற் பிறந்தேன்;
தந்தை நோயாளி தாயு மோரேழை
அண்ணன் தம்பிகள் ஐவரும் மாண்டார்
அக்காள் தங்கையும் இல்லை, அடுத்தவர்
உற்றார் உறவினர் ஒருவரு மேயிலை;
ஒருதடி நிலமும் ஓரணை ஏரும்
ஒருசிறு குடிலும் உண்டெமக் காஸ்தி
ஐயோ! தெய்வமே! ஐயோ தெய்வமே!
உற்றதெலாம் சொல ஒருகழி நூலாம்
ஒருநாள் போதுமோ? இருநாள் போதுமோ?
முற்றும் கேளும் முடிவையும் பாரும்!
*தாழையும் பதிக்குத் தலைவர் (அவர் பெயர்
ஏழையான் சொல்ல இசையுமோ அம்மா)
பாவியாம் என்னைப் பதின்றாண்டில்
ஐந்தாம் மனைவி யாக மணந்தனர்.
கணவர் வீட்டுக் கதையினைக் கேளும்
மனைவியர் வேலை வகையினைக் கேளும்
தொழுத்துச் சாணம் வழிக்க ஒருத்தி
தொட்டித் தண்ணீர் சுமக்க ஒருத்தி
அடுக்களைச் சமையல் ஆக்க ஒருத்தி
அண்டையில் அகலா திருக்க ஒருத்தி
அத்தனை பேர்க்கும் அடிமை யாளாய்
ஏழை பாவி யானும் ஒருத்தி.
எளியேன் சென்ற நாள்முதல் எல்லா
வேலையும் என்றலை மேலே யாச்சுது.
பெண்டிர் நால்வரும் பென்ஷன் பெற்றனர்;
பெரிய அக்காள் பெருமாப் பிள்ளை
"ஏனடி அம்மா! யான் ஏகாங்கி,
உரிய அரிசி உண்டெனில் சோறு
உழக்குக் குறுனொய் உண்டெனில் கஞ்சி,
மக்களைப் பெற்ற மகராசிகள் நீர்
உண்ணவேண்டும் உடுக்கவேண்டும்,
உழைத்துப் பொருளுண் டாக்க வேண்டும்,
எனக்கினி யிங்கே யாதுண் டம்மா?"

---

* தாழக்குடி.

என்று பெருமூச்செறிந்து சொல்லி
இருந்த இடம்விட்டிளகவே மாட்டாள்;
அடுத்த அக்காள் அழுபிள்ளைக்காரி
அடமும் கொஞ்சம் அதிகம் கொண்டவள்
அம்மா! மிளகை அரை என்றாலுடன்
அவள்கை மதலை அழுவது கேட்டிடும்;
பிள்ளைக்குணமோ பிடுங்கி வைப்பாளோ
என்னமாயமோ யானெது மறியேன்.
மூன்றும் அக்காள் மூழுச்சோம்பேறி
அன்றியும்,
மூன்று மாதமாய் முழுகவுமில்லை;
வாயா லெடுப்பால் வயாக்கோட் டியினால்
வறினகட்டில் இறங்கவே மாட்டாள்;
இனியோர் அக்காள் எடுப்புக்காரி
இந்திராணியும் ஈடில்லை, இவளது
மஞ்சள் பூச்சும் மயக்கிடு பேச்சும்
சாந்துப் பொட்டும் தாசிகள் மெட்டும்
கோல உடையும் குலுக்கு நடையும்
கொண்டை யழகும் கண்டு கணவர்
அண்டையிலிருந்து மகலவே ஒட்டார்.
'தங்கப் பெண்ணே தாராவே!
தட்டான் கண்டால் பொன்னென்பான்
நாசிலே வைத்து நீறு என்பான்,'
எங்கும் போகாமல் இங்கே யேயிரு
என்று சொல்லுவ திவட்கே இசையும்.
இவள்;
அடுக்களை வந்திடாள்—அரக்குப் பாவையோ?
கரிக்கலம் கை யிடாள்—கனகசுந்தரியோ?
ஏருகோலேந்திடாள்—மகராணி மகளோ?
சாணியைத்தொட்டிடாள்—சந்தனவடிவோ?
வெயிலில் இறங்கிடாள்—மென்மலர் இதழோ?
குடத்தை யெடுத்திடாள்—குருடியோ நொண்டியோ?
வஞ்சகி யிவள்செய் தலையணை மந்திர
உபதேசங்களை உண்மையென்றெண்ணிக்
கணவன் ஒவ்வொரு காலத்தெங்களைப்
படுத்திய பாடெலாம் பகர்வது மெளிதோ?

மாமியாரசியற் படலம்

இவர் கதை யிவ்வாறாக இனியென்
மாமி கதையை வகுப்பேன் கேளும்;
அரக்கு பூட்டாம், அறைப்புரை பூட்டாம்,
தட்டுப் பூட்டாம், சாய்ப்பும் பூட்டாம்,
அரிசியை நிதமும் அளந்து வைப்பாள்
நல்ல மிளகை நறுக்கி வைப்பாள்
கொல்லை மிளகைக் குறுக்கி வைப்பாள்
உப்பில் புளியை உருட்டி வைப்பாள்
கறிக்குத் தேங்காய் கருக்கி வைப்பாள்
கடுகையும் எண்ணிக் கணக்கிட்டு வைப்பாள்
தீபாவளிக்குத் தீபா வளியே
எண்ணெயறியும் என்றலையம்மா!
அரைக்குமஞ்சள் அளித்திடா மாமி
குளிக்கமஞ்சள் கொடுத்திடுவாளோ?
உன்மேலாணை ஒருநாளாகிலும்
கஞ்சியோ கூழோ காடி நீரோ
கும்பியாரக் குடித்ததேயில்லை.
கந்தைத்துணிகள் கட்டினதல்லால்
கண்டாங்கிகளைக் கண்டதேயில்லை.
அடுக்களை நடையே நிலயமாயினும்
அங்கும் இங்கும் ஆக அவ்வி
டெங்கும் இருப்பாள் எங்கள் மாமி.
இவளொரு கண்ணுக் கிணையவ் விந்திரன்
ஆயிரம் கண்ணும் ஆகாதுண்மை.
பின்னே நோக்கினும் முன்னுளதறியும்
முன்னே நோக்கினும் பின்னுளதறியும்
எறும்பும் காணா இடத்திவள் கண்போம,
புகையும் நுழையா இடத்திவள் புத்திபோம.
ஆணாய்ப்பிறந்தால் அகிலம் ஆளுவாள
இருகண்இருப்பின் இடமிது போதுமோ?
எல்லாம் வல்ல எம்பெருமானிவள்
குணத்தையறிந்தே கொடுத்தானொருகண்.
கணகணஎன்றெக் கணமும் நாக்கின்
அடிக்கும் மணியின்னிசை அடங்கிவிடுமென்
றெவரும் எண்ணி யிருந்ததேயில்லை.
வையைமுழுதும் உழக்கால் அளப்பாள்
நாட்டை முழுதும் நாழியால் அளப்பாள்
நரியை முன்னம் பரியாய் ஆக்கின
நாதனும் கண்டு நாண இவளும்
யானையைப் பூனையாக மாற்றுவாள்
பூனையை யானை போலக் காட்டுவாள்.
ஐயோ! உலகுக்கெங்கள் அருமை
அத்தை திருவிளை யாடலை யெல்லாம்
பத்துப் பரஞ்சோ திகளே பாடினும்
முடியாதென்றால் மூதறிவில்லா
அடியாள் சொல்லி அறியப்படுமோ?
இரக்கம் சிறிது மின்றி யெனக்கிவள்

இடுவாள் வேலைகள் இரவும் பகலும்
குழந்தைக்குப் பால் கொடுக்கவொட்டாள்
கும்பியாரக் குடிக்கவொட்டாள்
உண்ணவொட்டாள் உறங்கவொட்டாள்
உடலைக்கீழே சரிக்கவொட்டாள்.
அருமை மதினி அடிக்கடி அடிக்கடி
சடைவாறுதற்குத் தாய்வீடடைவாள்
மக்களும் பின்னால் வருவர், புருஷன்
இரண்டொரு நாட்கழிந் தெட்டிப் பார்ப்பான்.
வந்தால்* போகும்வரையிலு மென்னை
அம்மியில் வைத்துச் சமமந்தியாக
அரைத்து விடுவாள் ஐயம் அதற்கிலை.
என்னிரு மக்களும் இவருக் கேவல்
செய்து செய்து துரும்பாய்த் தேய்ந்தார்.

கேலிப்படலம்.

என்மகன் சாமி ஏதோ ஒருநாள்
அத்தை மகளென விளையாட்டாகவோ
வேண்டுமென்றோ, "வீரலெக்ஷ்மீ!
குளுக்கைபோலக் குறுகிப் போனயே!
எருமைபோல இளைத்துப்போனயே!
பனந்தூர் போலப் பாதிப்போனயே!
வயிற்றிலுனக்கு மடிப்புகளெத்தனை?
இன்னும் சிலநாள் இங்கிருப்பாயேல்
வாசலும் வேறு மாற்றவே வேண்டும்;
குதிலும் வெளியாய்க் கொஞ்நாளாச்சுதே!
பத்தய நெல்லும் பாதியாச்சுதே!
நீங்களும் வந்து நெடுநாளாச்சுதே!
இந்த ஆடி முழுதா மிங்கிருந்து
புதுநெல் வந்தாலும் போகமாட்டீரோ?
நல்லது நல்லது நல்லதம்மா
தின்பவனெல்லாம் தின்பான் போவான்
*'திருக்கணம் குடியான் தெண்டமிறுப்பான்;
அவியல் பொரியல் துவையல் தீயல்
பச்சடி தொவரன் கிச்சடி ஜட்னி
சாம்பார் கூட்டுத் தயிர்ப்புளிசேரி
சேனை எத்தன் சோதநெரிசேரி
பருப்பு பற்படம் பாயஸம் பிரதமன்
பழமிவையோடு படைப்புப்போட
எத்தனை நாளைக் கெங்களால் எலும்?
அரசனும் கூட ஆண்டியாவானே!

இப்படி உண்மையிருக்க யாவும்
மக்களுக்காக வாரிக் கொடுத்தான்
கடன்கள் வாங்கினன் கைச்சீட்டெழுதினன்
தூற்றிகொடுத்தான் என்றன் பெற்றோர்
எங்களய்யாவைத் தூற்றுவதெல்லாம்
உணர்வில்லாமல் உளறுவதல்லவோ?"
என்று கூறிய மொழிகள் யாவையும்
மங்கைகேட்டு மனம் நொந்தழுது
ஒன்றைப் பத்தாய்ப் பெருக்கியுடனே
தாய்க்குச் சொன்னள்; தந்தையுமறிந்தார்;
பையப் பையப் பாட்டியுமறிந்தாள்;
யாவரும் கூடி என் கண்மணியை
'உனக்கிங்கென்ன உண்டடா பயலே?
உடையக்காரியைத் தடைவையோ பயலே?
பத்திரமாயிரு! பழையகாட்டுக்
களுப்பிவிடுவேன் அறி நீ பயலே'
என்றிப்படிநா வெழுந்தது சொல்லி
ஏசிவசைகள் பேசிப் பிரம்பால்
ஐயோ ரக்தம் சிந்த அடித்தனர்.
காணுதென்று கண்ணில் மிளகும்
இட்டனர் இரக்கம் கெட்டவர் பாவிகள்.
நடந்ததையெல்லாம் நன்கறிந்தாலும்
யாதும் பேசாதிருப்பர் என் கணவர்.

(தொடரும்)

உத்தரராம சரிதம்.

ஸ்ரீமாந் O. N. அனந்தராமைய சாஸ்திரியவர்கள், M. A.

அங்கம் 1.

முன்னுரை.

வெள்ளியங்கிரியை மீதே வேரொடுமெடுத்த வீரக்
கள்ளவன் புயசாலைத்துங் கனகமாமவுலி பத்தும்
தள்ளியம் புவிமேல் வீழவொருகணை தொடுத்துவிட்ட
வள்ளலம்புயமேயன்ன மலரடி வணக்கஞ் செய்வாம்.

(வாழ்த்தானபின்)

---

* திருக்குறுங்குடி.

சூத்திரதார்ரன்:—வீணே விஸ்தரித்தல் வேண்டாம். பகவானுகிய காளப்பிரியா நாதருடைய விழா வேண்டி இன்று குழீஇய மகா ஜனங்களுக்கு விண்ணப்பம். காசியப கோத்திரத்திற் பிறந்தவரும், ஸ்ரீகண்டனென்னுஞ் சிறப்புப் பெயர் வாய்ந்தவரும், இம்மை மறுமை பயக்கவல்ல பன்னூலும் பயின்றவரும், ஜதுகர்ணியென்பாள் செல்வப் புதல்வனும், ஆய பவபூதியென்பாரை நீவிரறியீரோ! வாணி தன்னுயகனுய பிரமதேவன் மாட்டு எங்ஙனம் வசப்பட்டுளளோ அங்ஙனமே இவர் மாட்டும் வசப்பட்டுளாள். அத்தகைப் பெரியாரியற்றிய நாடகமாகிய உத்தாராம சரிதத்தை இப்பொழுதே நடிப்போம்.

சபையோர்களே! இக்கணம் முதல் ஸ்ரீராமன் காலத்திய அயோத்தி நாட்டான் ஒருவனுக என்னைக் கருதுங்கள்.

(நாற்புறமும் நோக்கி)

ஹா! ஹா! இராவணன் குலத்தை இராவணஞ் செய்த உத்தமராய ஸ்ரீராமபிரானுக்கு முடிசூட்டிய காலத்து என்ன முழக்கமாய் இருந்தது. இதென்ன இப்பொழுது எல்லாம் அடங்கியொடுங்கியிருக்கிறது?

(நடன் பிரவேசித்தல்)

நடன்:—இலங்கைப் போரில் பேருதவிபுரிந்த வானரர், அரக்கர், முடிசூட்டு நிகழ்ச்சியைக் கண்டு களிப்பான் வேண்டி ஈண்டு எழுந்தருளியவரும், புகுந்தவிடமெல்லாம் புனிதம் நிலைநாட்டும் புண்ணியராயவருமாய பிரம்மரிஷி, ராஜரிஷி முதலியோரை மகாராஜாவாகிய ஸ்ரீராமர் அவரவர் தம் ஊரிற்கு வழியனுப்பியாய் விட்டது. இவர்களுக்குரிய உபசரணையாதிய செய்வான் பொருட்டே இதுவரை முழக்கமாய் இருந்தது.,

சூத்:—அப்படியா?

நடன்:—தவிரவும், ஸ்ரீராமபிரானுடைய தாய்மார்கள் அனைவரும் அருந்ததியைப் பின்பற்றி வசிஷ்டர் வழிகாட்ட, மாப்பிள்ளை வீட்டில் நடக்கும் யாகத்திற்கும் போயிருக்கிறார்கள்.

சூத்:—நான் நாட்டுப் புறத்தானுகியபடியால் சற்று மன்னிக்கவேண்டும். இந்த மாப்பிள்ளை யென்பது யார்?

நடன்:—தசரதருக்கு சாந்தை யென்னுமோர் மகளுண்டு. நரபதி அவளை உரோமபாதனென்னும் அரசனுக்குத் தத்துக்கொடுத்தார். விபண்டகன் மைந்தனுகிய ரிசியசிருங்கமுனி அக்கன்னிகையை மணந்தார். அந்த ரிசியசிருங்கமுனி பன்னிரண்டு வருடகாலம் நடைபெறும் யாகமொன்று ஆரம்பித்துள்ளார். அதன்பொருட்டல்லவோ பூர்ண கர்ப்பிணியான ஜானகியைக்கூடப் போற்றுது பெரியோர்களெல்லாம் போயுள்ளார்கள்.

சூத்:—அஃதங்ஙன மிருக்கட்டும், வாரும். கோட்டைவாயிற்குள் புகுந்து நாம் நம்முடைய சாதி முறையை அநுசரிப்போம்.

நடன்:—புலவீர்; நாம் அரசனை வணங்குமாறு சிறிதேனுமாசற்ற ஓர் சீரிய செய்யுளைச் செய்தருளவேண்டும்.

சூத்:—செய்யுளியற்றுதல் சாலவும் நன்றே. ஆனல் ஊர்வாயை மூடுதல் யாருக்குத்தானியலும்? பெண்டீர் தூய்மையும் செய்யுள் தூய்மையும் ஆராயுங்கால் மேன்மக்களும் கீழ்மக்களே.

நடன்:—கீழ்மக்களா? அதினுங் கீழோரே! ஏனெனில் தேவியான வைதேகியைப் பற்றியும் ஜனங்கள் இப்பொழுது குறை கூறவில்லையா? இவர்கள் கற்பிக்குங் காரணமோ அன்னியராய அரக்கர் மாட்டு இவள் காலங்கழித்ததே. ஆனல் தூய்மைவிளக்குவான் தீப்பாய்ந்ததையோ இவர்கள் மனமொத்துக் கொண்டதாகவுமில்லை.

சூத்:—இவ்வகை மொழி மன்னர் காதெட்டுமோ? ஆயின், பெருங்கேடே.

நடன்:—எவ்விதத்திலும் தேவர்களும் ரிஷிகளும் மங்களமாக முடித்துவைக்கட்டும்!

(சிறிதுதூரம் நடந்து)

ஓய்! ஓய்!! மகாராஜா இப்பொழுது எங்கே எழுந்தருளியிருக்கிறார்? (கேட்டதாய்ப் பாவித்து) ஊரார் இப்படி சொல்லுகிறார்கள். மருமக்கள் களிக்க இதுகாறும் இங்கு தங்கிய சனகமகாராஜா தன்னுட்டுக்கேகினர். அத்துக்கத்தால் வாடிய தேவியை

தனிர்ப்பிப்பான் வேண்டி லோகபாலன் தர்மாஸனம் நீத்து அந்தப்புரத்துக்குச் செல்லுகின்றார்.

(சூத்திரதாரனும் நடனும் மறைதல்)

முன்னுரை முடியும்.

(பின்னர் ஸ்ரீராமரும் ஸீதையும் ஆசனத்தமர்ந்தவாறு வெளிக்காணுதல்.)

ஸ்ரீராமர்:—தேவி! பொறு! பொறு! நம்பெரியோர்களும் நம்பிரிவை ஆற்றுகில்லார்! ஓமதநியமியாது ஆதரிப்பார்தம், நித்திய நைமித்திக கர்மங்கள் அவர்களுடைய சுவதந்திரத்தைக் குறைத்துவிடும். இக்கர்மங்களை யவர் கைவிடின் பெரும் பாவ மலைச் சாரும்.

ஸீதை:—கொழுநரே! அதை யானுமறிந்துண்டு. ஆயினும் உறவினர் பிரிவு மனக்கவலையை விளைக்கின்றது.

ஸ்ரீரா:—அது அங்ஙனமே. இம்மைக் கொள்கைகள் மர்மங்களைத்துளைப்பனவே. இதுகாரணமாயே, அறிவினர் இவற்றை வெறுத்து காமமனைத்தையும் அறவே யொறுத்து கானகம் நாடி இன்ப முறுகின்றார்கள்.

கட்டியபாலன்:—(பிரவேசித்து) ராம! (என்று முழுவதுஞ் சொல்லுமுன் சங்கையுடன்) மகாராஜா!

ஸ்ரீரா:—(புன்முறுவல் பூத்து) பெரியோய்! எந்தையின் பரிசனங்கள் என்னை இராமபத்ரவென விளிப்பதே வனப்புடைத்து; இதுகாறும் விளித்தவாங்கே இனியும் விளிக்க.

கட்டிய:—தேவே! ரிசியசிருங்கமுனியின் ஆச்சிரமத்தினின்று அஷ்டாவக்கிரமுனி வந்தருளியிருக்கிறார்.

ஸீதை:—(ராமரை நோக்கி) உத்தம! ஏன் அவர் காத்துக்கொண்டிருப்பானேன்?

ஸ்ரீரா:—சடுதியில் வரும்படி செய்.

(கட்டியபாலன் போதல்)

அஷ்டாவக்கிரர்:—(பிரவேசித்து) நீவிர் இருவர்க்கும் க்ஷேமமுண்டாகுக!

ஸ்ரீரா:—பகவானே! நான் வந்திக்கிறேன். இவ்வாசனத்து வீற்றிருங்கள்.

ஸீதை:—பகவானே! நமஸ்காரம், என்னுடைய மாமிமார்கள், அவர்கள்தம் மருமகன் நாத்துன், ஆய யாவரும் க்ஷேமந்தானே!

ஸ்ரீரா:—மாப்பிள்ளை ரிசியசிருங்கமுனியும் தமக்கை சாந்தையும் இடையூறின்றி ஸோமயாகம் நடத்தினார்களா?

ஸீதை:—எங்கள் ஞாபகம் அவர்கட்குண்டா?

(தொடரும்.)

பறங்கிமா *

ஸ்ரீமாந் S. முத்துசுவாமிப் பிள்ளையவர்கள்.

இதற்குத் தென் திருவிதாங்கூரில் கொல்லம்மா அல்லது கொல்லாமமா என்று பெயர் வழங்குகிறது. காரணம் இன்னதென்று தெரியவில்லை. ஆனால் பறங்கிமா என்ற அதன் பெயரினாலேயே அது இத்தேசத்திய மாமரமல்லவென்பது வெளிப்படை. ஊன்றிப்பார்க்கும் குணமில்லாத நம் நாட்டார் அனேக பொருள்களின் உபயோகத்தைப் பற்றி அறியாதிருப்பதுபோலவே இம்மரத்தைப் பற்றியும் யாதொரு ஞானமுமில்லாதவர்களாயிருக்கிறார்கள்.

திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் ஏற்றுமதி இறக்குமதிக் கணக்குகளைப் பார்த்தால் இம்மரத்தின் முக்கியத்தன்மை நன்கு விளங்கும். பறங்கி அல்லது முந்திரிப் பருப்பின் விலையும் நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே வருகிறது.

இதன் ஜென்மபூமி தென் ஆபிரிக்காவும் மேற்கிந்தியத் தீவுகளுமாம். அவ்விடங்களில் இம்மரங்கள் காடாகவளர்கின்றன; கிருஷி செய்யப்பட்டால்

---

* இவ்விஷயம் "காஷகத்ரை மாசிகை" The "Travancore Agricultural Quarterly" என்ற பத்திரிகையைத்தழுவி எழுதப்பட்டது. (பத்திராதிபர்.)

16 முதல் 30 அல்லது 40 அடிவரை ஓங்கிப்படர்ந்து வளரும். சமுத்திரகிரப்பிலிருந்து மிக உயரமல்லாத மணற்பாங்கான பூமியே அதன் செழிப்பான வளர்ச்சிக்கு ஏற்ற பூமியாம். கொடிய கோடைகாலத்தும் இதன் வளர்ச்சிக்குத்தடை ஒன்றும் ஏற்படவில்லையாகிலும் நீர்ப்பாய்ச்சிவளர்த்தால் நல்ல பலனைக் கொடுக்கும். சமுத்திரத்தை மிக அடுத்துள்ள இடங்களிலும் காற்றோட்டம் மிகுதியுள்ள இடங்களிலும் அது செழிப்பாய் வளர்வதில்லை. இந்தியாவில் மேற்குக்கரை படுத்த நாடுகளில் இது ஏராளமாய் வளருகின்றது.

இது விரைவாய் வளருந் தன்மையுடையது; இரண்டு மூன்று வருஷத்தில் பலனும் தரும். ஆனல் முதல் எட்டு அல்லது பத்து வருஷங்களுக்கு அதிகமாய்க் காய்க்காது. அதன் பூ ஒருவித நறுமணமும் ரோஜாப்பூவின் சாயலும் உடையது. கார்த்திகை மார்கழி மாதங்களில் பூத்து பங்குனி சித்திரைமாதங்களில் காய்க்கும். கொட்டையை நட்டு நாற்றுவிட்டு வளர்ப்பதே சாதாரண வழக்கம்; விளைந்த கழிகளை நட்டும் வளர்த்தமுடியும்.

அதன் காய் முதலில் பச்சைநிறமாகவும் முற்றினவுடன் மங்கின சாம்பல் நிறமாயும் இருக்கும். கொட்டை சுமார் ஒன்று அல்லது ஒன்றரையங்குலநீளமுடையது. பழங்கள் மரத்தின் ஜாதிக்குத் தக்கபடி சிவப்பாகவும், மஞ்சளாகவும், வெண்மையாகவும் இருக்கும். கொட்டையின் புறத்தோடு கடுமையானது. அதனுள் அநேக சிறிய அறைகள் உண்டு; இந்த அறைகளில் இருண்ட நிறமும் வெம்மையும் பொருந்திய ஒருவகை நெய்யுண்டு. இந்த நெய் உடம்பில் விழுந்தால் விழுந்த இடம் பொக்குளிக்கும். அதனுள்ளிருக்கும் பருப்புக்கு ஒரு மேல் தொலியுண்டு; அத்தொலி சிறிது சாம்பல்நிறமானது; பருப்பு சுத்தவெண்மையானது. அதைத் தனிமையாகவும் பலவிதப் பலகாரங்களாகவும் தின்னலாம். ஐரோப்பாவில் இதன் செலவு வருஷத்துக்கு வருஷம் ஏறிக்கொண்டே வருகிறது.

இந்தப் பருப்பில் அடங்கியிருக்கிற பொருள்களின் பெயரும் அளவும் கீழே வருமாறும்.

தண்ணீர்	16.00
புரோட்டின்	16.00
கொழுப்பு	57.38
கார்போஹைட்ரேட்	5.28
நார்	0.91
சாம்பல்	2 .42

பருப்பிலுள்ள எண்ணெய் எளிதில் வற்றுது. இது வாதாங்கொட்டை எண்ணெயைப்போன்றசுவையுடையது.

கிரேற்றுபிரிட்டனிலும் ஐரோப்பாவிலும் பறங்கிமாங் கொட்டை ஏராளமாய்ச் செலவாகின்றது. போர்த்துகீஸ்காரருடைய கிழாப்பிரிக்காவிலும் பாம்பேயிலும் இருந்து இது பெரும்பாலும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. பறங்கிக் கொட்டையின் புறத்தோட்டின் பால் தீமையுடையதாகையால், கொட்டையைவறுத்து, புறத்தோட்டைநீக்கி, பருப்பாகவே ஏற்றுமதி செய்யப்படுகிறது. அந்தப் பாலிலிருந்து கண்ணுக்கும் முகத்துக்கும் கேட்டைச் செய்யக்கூடிய ஒரு ஆவி உண்டாவதால் அதை வறுக்கும்போது வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். வறுத்த கொட்டையின் பருப்பை கெட்டுப்போகாமல் வெகு காலம் பாதுகாக்கலாம்.

இப்பருப்பு 224 ருத்தல் அல்லது 2 சதம், கொண்ட பெட்டிகளாகவே ஏற்றுமதி செய்யப்படுகிறது. வாதாம்பழம் (Sweet almonds) கிடையாத காலத்தில் பறங்கிப் பருப்பின் விலை ஏறுகின்றது. சாதாரணமாய் ஒரு சதம் அல்லது 112 ருத்தலுக்கு 40 முதல் 50 ரூபாய்வரை விலையுண்டு.

இந்த மரத்திலிருந்து பருப்பைத்தவிர வேறுசில உபயோகமான பொருள்களும் எடுக்கப்படுகின்றன. புறத்தோட்டின் நெய் மருந்துக்கு உபயோகமாவதன்றி, கறையானுக்கும் ஒரு மாற்றாக இருக்கிறது. இந்த நெய் தேய்க்கப்பட்ட மரங்களில் கறையான் அரிப்பதில்லை. ஆந்தமான் தீவிலுள்ளோர் இந்த நெய்யை வலைகளிலும் தேய்த்துவருகிறார்கள்.

பறங்கிமாம்பழம் மிகச்சுவையுடையது. அதைப் பச்சையாகவும் தின்னலாம். பக்குவஞ் செய்தால் வெகுநாள் கெட்டுப்போகாமல் இருக்கும். பிரேசில் முதலிய நாடுகளில் இந்தப் பழச்சாற்றிலிருந்து ஒருவிதக் கள் எடுக்கிறார்கள். மரப் பட்டையிலுள்ள பசையை புஸ்தகங்கள் "பயின்று" (Bind) செய்வதற்கும், சிறு பிராணிகளைப் பிடிப்பதற்கும், வலைகளில் தேய்ப்பதற்கும் உபயோகப்படுத்துகிறார்கள்.

இதன் தடி ஓடங்கள், பெட்டிகள் முதலியன செய்வதற்கு உதவுகின்றது.

இப்பறங்கிமா இவ்வளவு பிரயோஜனமுள்ளதாயிருந்தும் நம்முடைய நாட்டார், அதைப் பயிர்செய்து வளர்க்கும் விஷயத்தில் உபேட்சையுடையவர்களாகவே இருந்துவருகிறார்கள். வேறு கிருஷிக்கு உபயோகப்படாத, கடற்கரையையடுத்த மணற்பாங்கான இடங்களில் இதை அதிகப் பணச்செலவும், பிரயாசையும் இல்லாமல் பயிர் செய்யலாம். காலக்கிரமத்தில் இதனால் நல்ல இலாபமும் உண்டாகும். ஆகையால் கடற்கரையை அடுத்த பிரதேசங்களில் இனியாவது இம்மரத்தை நட்டுவளர்த்திப் பலனடைய நம்முடைய நாட்டார் துணிவார்களென்று நம்புகின்றோம்.

மறவாநன்றி.*

(ஒரு சிறுகதை)

ஸ்ரீமான் S. முத்துசுவாமிப் பிள்ளையவர்கள்.

இரவு மணி எட்டாயிற்று. கோபாலன் செட்டியார் அன்று மாலைவந்த சுதேசமித்திரன் பத்திரிகையைவிரித்துப் படித்துக்கொண்டு ஒரு சாய்புநாற்காலியில் மலர்ந்து படுத்திருக்கிறார். கண்கள் பத்திரிகையில் பதிந்திருந்தாலும், கருத்து அதில் பதியவில்லையென்று அவருடைய முகத்தோற்றமே கூறுகின்றது. இடையிடையே கீழுதட்டைக் கடித்துக் கொண்டு மேற்றட்டை ஒரு நோக்கமுமின்றிப் பார்ப்பார்; கண்களை மூடுவார்; பின்னும் திடுக்கிட்டு விழிப்பார். இவ்வாறாக, செட்டியார்பொழுது போய்க் கொண்டிருக்க, ஒரு சிறுவன் அறைக்குள் வந்து, கைகட்டி வாய்புதைத்து, செட்டியார் முகத்தைக் கவனமாய் நோக்கிக்கொண்டு நின்றான். சுமார் மூன்று நிமிஷங் கழிய செட்டியார் கண்பார்வை பையன்மேல் விழுந்தது. உடனே "கண்ணப்பன் செட்டியாரய்யா எஜமானைப் பார்க்க வந்திருக்காங்க" என்று அச்சிறுவன் தெரிவிக்க, அவரை உடன்தானே அழைத்துவரும்படி கோபாலன் செட்டியார் கண்சாடை காட்டினார்.

அடுத்த நிமிஷத்தில் கண்ணப்பன் செட்டியார் அறைக்குள் வந்தார். படுத்திருந்த கோபாலன் செட்டியார் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தாரே தவிர, கண்ணப்பன் செட்டியாருக்கு நல்வரவுகூறவோ, வந்தனமளிக்கவோ, க்ஷேமம் விசாரிக்கவோ செய்யவில்லை.

எனினும் கண்ணப்பன் செட்டியார் அருகிலிருந்த ஒரு நாற்காலியில் வலிய உட்கார்ந்து "பத்திரிகையில் என்ன விசேஷம்! ஜெர்மன் சக்ரவர்த்தி வியன்னாவிலிருந்து திரும்பப் போய்விட்டாராமே! காரணம் தடுமலாம். எதுவும் அவருக்கு வா வென்றால் வரும்! போவென்றால் போகும்!!" எனப் பேசத்தொடங்கினர். கோபாலன் செட்டியார் இம்மொழிகளைச்செவிகொடுத்துக்கேட்கவோ பதிலுரைக்கவோ இல்லை. பின்னும் க—செ "ஏதய்யா! இப்படி இருக்கிறீர்கள். வாய்திறந்து பேசக்கூடாதா? அவ்வளவுக்கு என்ன துரோகம் செய்தேன். வாங்கும்போது தாயைப்போலவும் கேட்கும்போது பேயைப்போலவும் கடன் கொடுப்போன் உலகத்தாருக்குத் தோன்றப்படுவது இயல்புதான். மயிருடாடாத நட்புப் பொருளுடாடக்கெடும், மெய்தான்! மெய்தான்!!"

இவ்வளவும் கேட்டவுடன், இதுவரையில் மௌனமாய் அயர்ச்சியுற்றிருந்த கோபாலன் செட்டியார் முகம் விளக்கமுற்றது. வெகுநாளாய் ஒரு பொருளைத் தேடிக்கொண்டிருந்த ஒருவன், அகஸ்மாத்தாய் அப்பொருளைக் காணநேர்ந்தால் எத்தகைய முகபேதம் அடைவானோ அத்தகைய பேதத்தை இவரும் அடைந்தார். தன் பூர்ண உருவமும் உயரமும் விளங்கும்படி நிமிர்ந்தார்.

"மெய்தான்! மெய்தான்! உலக இயல்பு அப்படித்தான்! கடன்கொடுத்தும் இடம் கொடுக்காத கசடர்களை உலகம் பேயென்று எண்ணுவதும், காணநடுங்குவதும் அதிசயமா? பேயும், இடங்கொடாக் கடன்காரரைப்போல் அவ்வளவு கொடுமையுடையதல்லவென்பது என் அபிப்பிராயம். காந்தாரி, சூர்ப்பநகை, தாடகை முதலிய புண்ணியவதிகளையும், இராவணன், சூரபத்மாசுரன், இரண்யகசிபு, துரியோதனன் முதலிய சாந்த மூர்த்திகளையும் ஒன்று சேர்த்துக்குழைத்து உருட்டித்திரட்டி ஒருருவாக்கி உயிரும் கொடுத்தால், இடம் கொடாக் கடன்காரருக்கு ஒருவாறு ஒப்பிடலாம். ஐயய்யோ! இந்தப் பாதகர்களாலேயே

* All rights reserved.

நாட்டில் பஞ்சம் மேலிடுகின்றது; பிளேக், காலரா முதலிய தொத்துவியாதிகள் பரவுகின்றன; அக்ரமம், அநீதி முதலியன தலையெடுக்கின்றன ஹரி! ஹரி!"— கோபாலன் செட்டியார் இவ்வாறு தன் வயிற்றெரிச்சலைக் கொட்டிமுடிக்க, கண்ணப்பன் செட்டியார் சிறிதேனும் கலக்கங்கொள்ளாமல், மிகவும் சமாதானத்தோடு சொல்லுகிறார்:——"ஐயா! தாங்கள் இதிலுமதிகமாக என்னை வைதாலும் நான் கோபங்கொள்ள மாட்டேன். தேகசக்தி அற்றவர்களுக்கும், பிணிவாய்ப்பட்டவர்களுக்கும், கொடுந்துன்பம் அநுபவிப்பவர்களுக்கும், மன எரிச்சலும் கோபமும் உண்டாவது சகஜந்தான். தங்கள் நிலைமையில் நான் இருந்தாலும் இந்தமாதிரியே மனம் எரிவேன். ஆகையால் தங்கள் தீச்சொற்களுக்கு நான் வருத்தமடையவில்லை. நான் தங்களுக்கு இடந்தரவில்லையென்று குறை கூறுகின்றீர்கள். தாங்கள் தரவேண்டிய மூன்றுலட்ச ரூபாய்க்குமட்டும் தங்களுக்குக் கடனிருக்குமானால் நான் ஆத்திரப்படவுமாட்டேன்; எத்தனை வருஷங்களுக்கு வேண்டுமானாலும் காத்துக் கொண்டுமிருப்பேன். தங்களுக்கு 10 லட்சத்துக்கு மேல் கடனிருப்பதை ஒருவரும் அறியவில்லையென்று நினைத்திருக்கிறீர்கள். நம்மைப்பற்றி நமக்குத் தெரிவதைவிட உலகத்துக்குப்பதின்மடங்கு அதிகந் தெரியுமென்ற நீதியை நீங்கள் அறியமாட்டீர்களா? எத்தனை நாளைக்குத்தான் முழுப் பூசணிக்காயைச்சோற்றுக்குள் அமிழ்த்துவீர்கள்! கெட்டிக்காரன் புரட்டும் எட்டுநாளைக்குத்தானே! தங்கள் மனைவியும் ஏக புத்திரியும் இவ்விஷயத்தை அறிந்தால் மிக வருந்துவார்கள் என்றெண்ணி, அவர்களை சுகமெடுக்க அனுப்பும் பாவனையாக ஆலுவாய்க்கு அனுப்பிவிட்டீர்கள். இந்தத் தந்திரங்களையெல்லாம் நான் அறியவில்லையென்று எண்ணுகிறீர்களா! நொந்தபுண்ணில் கோலிட்டுக் கிண்டுவது நீதியுமல்ல; தருமமுமல்ல. என்னைத் தாங்கள் பகைவனைப்போல் வெறுக்கிறீர்கள். நானோ தங்களை அரிய நண்பனாக மதிக்கின்றேன். அதற்குத் திருஷ்டாந்தம் வேண்டுமானால் இப்பொழுதே காட்டுகிறேன். தாங்கள் எனக்குத் தரவேண்டிய 3-லட்சத்தையும் நான் இழக்கத் தயாராயிருப்பதோடு, மற்றுமுள்ள பத்துலட்சரூபாய்க் கடன்களையும் நான் தீர்க்க உடன்படுகிறேன். அதற்குப் பிரதியாகத் தங்களிடமிருக்கும் ஒரு பொருளைமட்டும் நான் அடைய விரும்புகிறேன். என்ன! நான் சொல்வதைக் கேட்கிறீர்களா! இதற்கு மறுவார்த்தை இல்லை. என் அன்பைப் பரீட்சித்துப் பாருங்கள். நான் விரும்பும் பொருளைக்கொடுக்க உடன்படுங்கள்."

கோ—செ—"அப்பப்ப! என்ன அன்பு! என்ன கருணை! என்னதயவு! இதுங்கூடவா? பேஷ்! பேஷ்!! கர்னனும் இனி என்னாவான்! இவ்வளவு சீக்கிரத்தில் நல்லவர் ஆய்விட்டீர்களே! இதுவென்ன இந்திரஜாலம்! இதுவென்னமாயம்!! அதிருக்கட்டும். தாங்கள் தங்கள் கருணைப் பெருக்கிற்காக என்னிடமிருந்து அடையவிரும்பும் பொருள் என்ன?"

க—செ—"பொருளா! தங்கள் புத்திரிதான்."

கோ—செ—நடுநடுங்கி "என்ன! என்ன!!"

க—செ—"பொறுங்கள்! பொறுங்கள்! பத்துப் போனாலும் பதற்றமாகாது. ஆயிரம்போனாலும் ஆத்திரமாகாது. என் இரண்டாவது மனைவியிறந்து 3-வருஷமாயிற்று. நான் இன்னும் கலியாணஞ் செய்யவுமில்லை. என் 50-வயது ஒருவயதா? அறுபதுலட்சம் ரூபாய் ஆஸ்தியை என்ன செய்ய! இவ்வளவும் அநுபவிக்க ஒரு சிறுகுஞ்சுகூட இல்லையென்று தாங்கள் அறிவீர்கள். தங்கள் புத்திரியை எனக்கு விவாகம் செய்து கொடுத்தால் அவள் இந்த அறுபதுலட்சத்துக்கும் எனக்கும் நாயகி—"

கண்ணப்பன் செட்டியார் இவ்வளவும் சொல்லி முடிப்பதற்குள் கோபாலன் செட்டியார் நாற்காலியிலிருந்து பாய்ந்தெழுந்து மூலையில் இருந்த தடியை எடுக்க, கண்ணப்பன் செட்டியார் "ஒருவாரம் அவதி தந்திருக்கிறேன்—ஆலோசித்துச் சொல்லும், இல்லாவிட்டால் உம்முடைய செம்பைத் துலக்கிவிடுவேன்" என்று சொல்லிக்கொண்டே வெளியிற்பாய்ந்து ஓடிவிட்டார்.

கோபாலன் செட்டியார் அவர் பின்னால் வெறிகொண்டவர்போல் ஓடினாராயினும், தன் தொந்திப் பாரத்தினாலும், கோபநடுக்கத்தினாலும் அவரையடுக்க முடியாமல், திரும்பவும் தன் அறைக்குள்வந்து சாய்பு நாற்காலியில் அடியற்ற மரம்போல் விழுந்தார். அவரது சிந்தையில் அப்பொழுது பற்பல சிந்தனைகள் புற்றீசல்போல் தோன்றி மறைந்தன. "ஆ! ஆ!! என் அருமைக் கண்மணியை——பளிங்கொத்த மனமும், பாலொத்த குணமும், பசுங்கிள்ளை மொழியும், உடைய என் செல்வச்சிறுமியை—இந்தப் பேயனுக்கு—காட்டுக்கோர் கால் நீட்டியிருக்கும் கசடனுக்கு.

அன்பும் அருளுமில்லா வம்பனுக்கு—பணப்பேய் பிடித்தாடும் பாதகனுக்கு—இரண்டு மனைவிகளை எமபுரம் அனுப்பிய நீசனுக்கு—ஆ! ஆ!! இவனுக்கா விவாகம் செய்துகொடுக்கவேண்டும்? நன்று! நன்று!! இப் பாவியின் வீட்டுவாசத்துக்கு என்னுயிர் நிலையான புதல்வியை அனுப்புவதைவிட நான் ஜெயில் வாசத்தையே பெரிதென்ன மதிப்பேன். ஒருவார அவதியாம். அடா பாவி! ஒருவாரத்துக்குள் உன் உயிர்ப்பாரம் தொலைக்கிறேன் பார்.——"

அன்றிரவு கோபாலன் செட்டியார் உண்ணவோ இமை மூடவோ இல்லை. கடன்பட்டாருக்கு அழுதமும் கைக்குமாம். மலரணையும் முட்போல் உறுத்துமாம்.

மறுநாட் காலை வழக்கம்போல் எழுந்து கால் நடையாகவே தன் மளிகைக்குச் சென்றார். போகும் வழிக்கு, பத்மாலய "ஹோட்ட"லில் காப்பிசாப்பிடுவதற்காக ஏறினார். பரிசாரகன் விளம்பிய பல பட்சணங்களில் சிலவற்றை மட்டும் ருசிபார்த்துக் கொண்டு வியாகுல சித்தராய் மௌனமுற்றிருக்கும் பொழுது அவருக்கெதிரிலிருந்த ஒருவர் இவர் முகத்தையே உற்றுநோக்குவதைப் பார்த்தார். மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயாம்! அவரது உற்றுநோக்கல் செட்டியார் மனதில் பலவித எண்ணங்களைக் கிளப்பிற்று. கிளப்பவே காப்பியையும் பட்சணங்களையும் அப்படியே வைத்துவிட்டு, பையிலிருந்து அரை ரூபாயை எடுத்து பரிசாரகன் முன் வீசி, திடீரென எழுந்து மளிகைநோக்கி நடந்தார்.

மளிகையிலும் செட்டியார் பட்டபாடு கொஞ்சமல்ல. கூட்டிலடைபட்ட சிங்கம்போலவும் மரண தண்டனை விதிக்கப்பெற்ற குற்றவாளிபோலவும் தட்டழிந்தார்.

இரவு 8-மணிக்கு வீடு வந்து சேர்ந்தார்! தலைநாள் இருந்த அறையில் சாய்புநாற்காலியில் எண்ணுதனவெல்லாம் எண்ணிக்கொண்டு படுத்தார். உண்ணவும் விரும்பிலர். உறக்கமோ வரவில்லை. மேல் தட்டைநோக்கியபடியே கிடந்தார். இத்தருணத்தில் வேலைக்காரன் உள்ளேவந்து யாரோ ஒருவர் செட்டியாரைப் பார்க்கவந்திருப்பதாகத் தெரிவிக்க, செட்டியார் வந்தவரை உள்ளே வரும்படி சைகை காட்டினார்.

சில நிமிஷத்தில் ஒருவர் உள்ளேவந்தார். சாமானிய உயரமும் வன்மையும் அழகும் வாய்ந்த உடம்புடையவர். வயது 35-க்கு மேலிராது. நடையுடை பாவனைகளால் பணக்காரன் போலவே தோன்றினர்.

இவரைக் கண்டதும் செட்டியார் திடுக்கிட்டெழுந்து, பக்கத்தில் கிடந்த நாற்காலியைக்காட்ட, வந்தவர் செட்டியாருக்கு வந்தனம் புரிந்து உட்கார்ந்தார்.

வந்தவர்:—"ஐயா! என்னைத் தெரியுமா?"

செட்டியார்—"தெரியவில்லையே. இன்று காலை பத்மாலய ஹோட்டலில் பார்த்த ஞாபகமிருக்கிறது."

வந்தவர்—"அதற்குமுன் பார்த்ததில்லையா?"

செட்டியார்—"இல்லையென்றுதான் தோன்றுகிறது."

வந்தவர்—"வருஷம் 15ஆனால்மறக்காமல் இருக்குமா?

செட்டியார்—"என்னய்யா! தாங்கள் சொல்வது ஒன்றும் விளங்கவில்லையே!"

வந்தவர்—"விளங்கும்படி சொல்லுகிறேன். 15 வருஷத்துமுன் ஒருநாளிரவு காமணையில் ஒரு பாட்டுக்கச்சேரிக்குத் தாங்கள் போனதில்லையா?"

செட்டியார்—"எத்தனையோ கச்சேரிகளுக்குப் போயிருக்கிறேன். அதனால் என்ன."

வந்தவர்—"நான் சொல்லும் இரவில் நடந்த கச்சேரி தங்கள் சிநேகிதர் உண்டியல் வியாபாரம் சோமாசி அய்யர் அகத்தில்."

செட்டியார்—"என்னவோ! எனக்கு ஞாபகம் இல்லை. அதெப்படியேனுமிருக்கட்டும். அந்தக் கச்சேரிக்கும் தங்களுக்கும் சம்பந்தமென்ன? தாங்கள்தான் அன்று கச்சேரி நடத்தினீர்களோ?"

வந்தவர்—"தங்களுக்கு ஞாபகம் இருக்க நியாயமில்லை. நானும் மறந்திருந்தால் என்னைப்போல் நன்றி கெட்டவர்கள் இந்த உலகத்தில் இரார்கள். நான் கச்சேரி நடத்தியவனல்ல. தங்களிடமிருந்து அன்று உயிர்ப்பிச்சையும் உலகவாழ்வும் பெற்றவர்."

செட்டியார்—"உண்மையாகத் தங்கள் பேச்சொன்றும்

எனக்கு விளங்கவில்லை. உள்ளதை மறக்காமல் விரைவில் சொல்லுங்கள், இந்தமாதிரி வாதாட்டத்துக்குரிய நிலைமையில் நானிப்பொழுதில்லை——"

வந்தவர்—"ஓ! ஓ!! சொல்லுகிறேன். அன்றிரவு கச்சேரி முடிந்தவுடன் ஜலஸ்பரிசத்திற்காக ஆற்றங்கரைக்கு வந்தீர்கள். நான் அன்று 15-வயதுள்ள அனுதப்பையனாயிருந்தேன். மூன்றுநாள் பட்டினியிருந்து உயிர்ப்பாரமும் உடற்பாரமும் தாங்கமுடியாமல், எல்லாப் பாரத்தையும் புண்ணியவதியாகிய கங்காதேவிக்கு ஒப்புவிக்கும் நோக்கத்தோடு ஆற்றில் குதித்தேன். ஒரு முன்றமுங்கி மேல்வந்தவுடன் கருணைக் கடலாகிய தாங்கள் நீரில் குதித்து என்னையெடுத்துக் கரை சேர்த்தீர்கள். நான் பின்னும் ஆற்றில் குதிக்க எத்தனிக்கையில், தாங்கள் தடுத்து என் வரலாற்றை வினவினீர்கள். நான் என் வரலாறு முழுதும் தெரிவிக்க, என் வறுமையை நீக்குவதற்கு என்ன வேண்டுமென்று கேட்டீர்கள். நான் பத்துரூபாய் போதுமென்றேன். தாங்கள் உடன்தானே முன்பின் பாராமல் 50 ரூபாய் கொடுத்தீர்கள். அந்த ·0 ரூபாயினால் நான் £0 லட்சப் பிரபு ஆனேன். ஆனால் அந்த 50 லட்சமும் எனக்குச் சொந்தமல்ல. நான் தங்கள் கூலிக்காரன். தாங்கள் அந்தச் செல்வத்துக்கு உடைவன். அந்தச் செல்வத்தைத் தங்களிடம் சேர்க்கவே இப்பொழுது வந்திருக்கிறேன்." என்று சொல்லி, தன் கையிலிருந்த ஒரு சிறு தோற்பையிலிருந்து 50 லட்சம் ரூபாய்க்குள்ள ஒரு செக்கையெடுத்து செட்டியார்முன் நீட்டினார்.

செட்டியார் நிலைமையை என்னென்று வர்ணிப்பது. அவர் உருவமட்டும் அங்கு நின்றதே அன்றி உணர்ச்சியெல்லாம் எங்கேயோ பறந்துலாவியதாகத் தோற்றிற்று. ஆம்! ஆம்!! சித்திரப் பதுமைபோல் நின்றார். கண் இமைத்திலர் விழித்தும பார்த்திலர்; உயிருற்றிருந்தும் உணர்ந்திலர். இப்பிரபஞ்சமே அவர் சிந்தனையை விட்டு மறைந்திருந்தது போலவாயிற்று. ஆநந்த சாகரத்தில் மூழ்கினார் என்றாலும் அவர் நிலைமையின் ஆயிரத்திலொரு பங்கை விளக்காது. அந்நிலைமையை ஒருவாறு சொல்லத் துணியின்,

"இழந்தமணி புற்றரவெதிர்ந்த தெனல் ஆனார்.
பழந்தன மிழந்தன படைத்தவரை யொத்தார்
குழந்தையை யுயிர்த்த மலடிக்குவமை கொண்டார்
உழந்து விழிபெற்றதொர் உயுர்ப்பொறை நிகர்த்தார்"

ஆம்! பரமானந்தக் கிளர்ச்சியால் கவியப்பெற்றார். இவ்வாறு சுமார் பத்து நிமிஷம் கழிய, செட்டியார் துயில்விட்டெழுபவர்போல் விழித்து, வந்தவர் நீட்டிய "செக்கை" உற்றுப்பார்த்தார். 50 லட்சம் ரூபாய் என்று தடித்த எழுத்தில் எழுதியிருப்பதைத் தன் தலையில் எழுதியிருப்பதுபோல் உணர்ந்தார். உணரவும் வந்தவரை இறுகத்தழுவி "தம்பீ! இதன் வரலாற்றை விளங்கச்சொல்லும். அன்று நான் உமக்கு உயிர்ப் பிச்சை அளித்திருந்தால், இன்று நீர் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் உயிர்ப் பிச்சை அளித்தீர். இந்த 50 லட்சமும் வந்த வகையினைக் கூறும்! கூறும்!" என ஆத்திரப்பட்டார்

வந்தவர்—"ஐயா! தாங்கள் உதவிய 50 ரூபாயும் கொண்டு கொழும்பு போய்ச் சேர்ந்தேன். அங்கே வேலை கிடையாமல் ஒரு மாதம்வரை அலைந்தேன், கடைசியாக ஒரு நகரவணிக வியாபாரி கடையில் கணக்குப் பிள்ளையானேன். அவர் மிகவும் நல்லவர்;— தமிழில் நல்ல பாண்டித்தியமுடையவர். வேதாந்த நூல்களை வாசிப்பதே அவருடைய பொழுதுபோக்கு. வியாபார விஷயத்தில் அவ்வளவு கவனம் செலுத்துவதில்லை. ஆகவே சிறிது காலத்தில் எல்லாப் பாரமும் என் தலையிலே பொறுத்தது. நான் மிகவும் நம்பிக்கையுடன் வேலை பார்த்து வந்தேன். செட்டியாரின் ஏக புத்திரனும் மனைவியும் திடீரென நோய்கண்டிறக்க, அவர் ஏக்கம் கொண்டு தன் சொத்துக்களையெல்லாம் பல தருமஸ்தாபனங்களுக்கு பகுத்துக் கொடுத்து, ஸந்யாசியாகி காசிக்குப் போய்விட்டார். தருமம் அளித்த கூட்டத்தில் எனக்கும் பதினாயிரம் ரூபாய் கிடைத்தது. அதைக்கொண்டு நான் தனிமையாக வியாபாரம் தொடங்கினேன். அதிர்ஷ்ட வசத்தினால் அன்பது லட்சமும் சம்பாத்தியம் செய்தேன். ஆனால் நான் தங்களை ஒருபொழுதா மறந்திருக்கவில்லை இம் மாதத் தொடக்கத்தில் தங்களைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை எங்ஙனமோ உண்டாயிற்று. அதனால் இவ்விடம் வந்தேன. ஆகையால் இந்த அன்பது லட்சத்தையும் ஏற்றுக்கொள்ளுங்கள். இதுவே என வரலாறு. என் அதிகம் விரிககவேண்டும். கண்ணப்பன் செட்டியார் கடனும் அனறுதானே கொடுக்கப்பட்டது. மனைவியும் மகளும் உடன்தானே புறப்பட்டு வந்து சேரவேண்டுமெனறு ஆலுவாய்க்குத் தந்தியும் சென்றது.

கடைசியாக,வந்தவரான நடராஜச் செட்டியாருக்கும் கோபாலன் செட்டியார் குமாரி கோகிலாம்பாளுக்கும் விவாகமும நடந்தது. சித்திரை மாதத்தில் சீமந்தமாம்.

S. முத்துசுவாமிப் பிள்ளை.